இலங்கையின் புராதன சைவாலயங்கள்

# கதிர்காமம்

குல. சபாநாதன்
எழுதியது

பதிப்பாசிரியர் :
க. செல்லையா
அராலி வடக்கு, வட்டுக்கோட்டை

திருமகள் அழுத்தகம்
சுன்னுகம்

பதிவுரிமை] 1947 [விலை ரூபா 2

## இந்நூலாசிரியருடைய வேறு நூல்கள்

(விரைவில் வெளிவரும்)

1. பூ
2. ஈழநாடும் சோழர் தொடர்பும்
3. யாழ்ப்பாணத்தரசர்களும் தமிழும்
4. யாழ்ப்பாண வைபவமாலை
5. சி. வை. தாமோதரம்பிள்ளை
6. ஈழநாடும் தமிழும்
7. ஈழநாட்டுச் சைவாலயங்கள்

6553a

[ஆசிரியர் பதிப்புரிமை பெற்றது]

### புத்தகம் கிடைக்குமிடங்கள்:

தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்.
ஸ்ரீ லங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
நூலகம், 19 ரைவிள் ஸ்ரீற், கும்பனித்தெரு, கொழும்பு.

## உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சமர்ப்பணம் | v |
| 2. | முன்னுரை | vii |
| 3. | அணிந்துரை — திரு. சு. நடேசபிள்ளை | xii |
| 4. | சிறப்புப்பாயிரம் — புலவர் பாண்டியனார் | xiii |


## முதற்பகுதி


| | | |
|---|---|---|
| 5. | முருக வழிபாடு | 1 |
| 6. | கதிர்காமம் | 5 |
| | புராணவரலாறு | 6 |
| | சரித்திரம் | 7 |
| | கதிர்காமக்ஷேத்திரம் | 10 |
| 7. | கதிரை யாத்திரை | 15 |
| | செல்லக் கதிர்காமம் | 18 |
| | கதிரைமலை | 18 |
| 8. | கோயிலைத் தரிசித்தோர் | 21 |
| 9. | முத்துலிங்கசுவாமி | 25 |
| 10. | ஜயசிங்ககிரி சுவாமி | 29 |
| 11. | கெசபுரிசுவாமி | 31 |
| 12. | பாலசுந்தரி | 32 |
| 13. | க்ஷேத்திர மகிமை | 33 |
| 14. | நிர்வாகம் | 35 |
| 15. | நிர்வாக ஊழல்கள் | 37 |
| 16. | ஆடி வேல்விழா | 38 |
| 17. | காவடி விழா | 41 |


## இரண்டாம்பகுதி


| | | |
|---|---|---|
| 18. | கதிர்காமவேலவர் தோத்திரத்திரட்டு | 1—41 |
| 19. | கதிர்காம ஸ்தல சம்பந்தமான நூல்கள் | 42 |

## சமர்ப்பணம்

*யாமோ தியகல் வியுமெம் மறிவுந்*
*தாமே பெறவே லவர்தந் ததனுற்*
*பூமேன் மயல்போ யறமெய்ப் புணர்வீர்*
*நாமே னடவீர் நடவீ ரினியே.*

— *கந்தரநுபூதி*

*இந்நூல், ஈழநாட்டிலும் பரதகண்டத்திலுமுள்ள முருகன் அடியார்களுக்கு அர்ப்பணஞ் செய்யப்பட்டது.*

*முருகா! முருகா!! முருகா!!!*

உ

சிவமயம்

# கதிர்காமம்

மணியுமிழ்ந்து மாமலைமேன் மேய்வனவு நாகம்
மடவர லார்கொய்ய மலர்வனவு நாகம்
பிணியவிழ்ந்து நன்னுளாற் பூப்பனவும் வேங்கை
பிறங்கன்மாத் தொலைத்தவற்றான் றுய்ப்பனவும் [வேங்கை
இறைக்காசா னெம்மருளா மாலையு மாலை
யெமக்கினிதா யாமவனைச் சூடுவது மாலை
நிறைக்காய்த்தி நெஞ்சஞ்சச் சுடுவதுவுங் காமம்
நிலங்காக்குஞ் சேயத னெடுநகருங் காமம்.

—யாப்பருங்கலவிருத்தி மேற்கோள்

ஆதி பவானி மடிமீது வைத்துயிர்க் கைந்தக்கர
மோதி யுணர்த்தும் பொருவருங் காசியி னோங்கிக்குகன்
கோதில்குலங்கொண்டு முக்கோணம்வாய்ந்துகுலவருட்ச
மாதி யொளிருங் கதிர்காம மீழநன் மண்டலமே.

—ஈழமண்டலசதகம்

உ

முருகன் துணை

# முன்னுரை

கரவா கியகல் வியுளார் கடைசென்
றிரவா வகைமெய்ப் பொருளீ குவையோ
குரவா குமரா குலிசா யுதகுஞ்
சரவா சிவயோ கதயா பரனே.

—கந்தரநுபூதி

'இலங்கையின் புராதன சைவாலயங்கள்' என்ற வரிசையில் அநேக நூல்களை எழுதி வெளியிடவேண்டு மென்ற எண்ணம் எனக்கு நெடுங்காலமாக இருந்து வந்தது. அதன் பயனாக அவ்வரிசையில் முதலாவதாக இச்சிறு நூல் வெளிவருகின்றது. தென்னிலங்கையில் மாணிக்க கங்கைக் கரையிற் கோயில்கொண் டெழுந் தருளியிருக்கும் கதிர்காமக் கடவுளைச் சைவர்கள் சரித்திர காலத்துக்கு முற்பட்ட காலந் தொடக்கம் வழிபட்டு வந்திருக்கிறார்கள். அப்பெருமான்மீது காலத்துக்குக்காலம் பாடப்பெற்ற தோத்திரப் பாடல் களோ எண்ணிறந்தவை. பிள்ளைத்தமிழ், கலம்பகம் போன்ற சில பிரபந்தங்களும் வெளிவரலாயின. ஈழ நாட்டுத் தலங்கள்மீது பாடப்பெற்ற நூல்களைச் சேகரிப்பதே இப்பொழுது எனது பொழுதுபோக்காக இருந்துவருகின்றது. இதன்பயனாக அநேக தோத்திரப் பாடல்களையும் பிரபந்தங்களையும் சேகரிக்கலானேன்.

கதிர்காம ஸ்தலத்தின் வரலாற்றை என்னா லியன்றவரை ஆராய்ந்து தொகுத்து இந்நூலின் முதற் பகுதியாகவும், என்னாற் சேகரிக்கப்பெற்ற தோத்

திரப் பாடல்களுட் சிறந்தவற்றைத் தெரிந்தெடுத்து இந்நூலின் இரண்டாம் பகுதியாகவும் வெளியிடுகின்றேன். இரண்டாம் பகுதியிற் சேர்க்கப்பட்ட சில பிரபந்தங்களைப் பூரண உருவத்தில் தனித்தனியாக வெளியிடவேண்டுமென்ற விருப்புண்டு.

சரசுவதிபீடம் கந்தப்பசுவாமிகள் எனும் ஈழநாட்டுப் புலவர் ஒருவர் பாடிய **கதிர்காமக் கலம்பகம்** என்னும் நூலொன்று உண்டு என்று காலஞ்சென்ற இராசநாயகமுதலியார் அவர்கள் எனக்குச் சொல்லியிருந்தார்கள். அந்நூலைத் தேடி நான் பல இடங்களுக்கும் அலைந்ததுண்டு. பின்னர்த் திரிகோணமலையில் ஒருவரிடம் அந்நூல் இருப்பதாகக் கேள்விப்பட்டு அங்கே சென்றேன். அவரிடம் அந்நூலைப் பெற்றுப் படித்து இன்புற்று, அவர் வீட்டிலிருந்தே சில செய்யுட்களைமட்டும் இரவுபகலாகப் பிரதிசெய்து கொண்டு திரும்பினேன். பின்னர், சில வருடங்களுக்குமுன் நான் சென்னைக்குச் சென்றிருந்த பொழுது, சைவப்பணிபுரியும் பெரியார் திரு. சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள் இல்லத்துக்குச் சென்ற பொழுது **கதிர்காமக் கலம்பகத்தைப்பற்றி** அவர்களிடம் உசாவினேன். அவர்கள் உடனே தம்முடைய தமையனார் திரு. சே. வெ. சோமசுந்தரம்பிள்ளையவர்களிடம் இருந்த பிரதியை இரவலாகப் பெற்று என்னை நம்பித் தந்தார்கள். தமிழ்ப் பண்டிதர் திரு. சோமசுந்தரம்பிள்ளையவர்கள் ஈழநாட்டுப் புலவர்கள்மீது அதிக அபிமானமுடையவர்கள். எங்கள் நாட்டிற் காண்பதற்கரிய ஈழநாட்டுப் புலவர்களின் பழைய நூல்களையும் கடிதங்களையும் பொன்னேபோற்பேணிப் பாதுகாத்து வைத்திருக்கின்றார்கள். அத்தகைய அன்பரிடமிருந்து **கதிர்காமக் கலம்பகம்** என் கைக்கெட்

டியது கதிர்காமப் பெருமானின் திருவருளென்றே கருதினேன். அதனை மீளவும் அச்சிடுவதாக வாக்களித்தே பெற்றுவந்தேன். வரும் வழியில் தஞ்சாவூருக்குச் சென்று அங்குள்ள சரசுவதிமகாலயத்தில் கதிர்காமப் பெருமான்மீது பாடப்பெற்ற ஏட்டுப்பிரதியொன்றிருப்பதாக அறிந்து அதனையும் பார்வையிட்டேன். சில பாடல்களை மட்டும் தெரிந்தெடுத்து எழுதினேன். சென்னை நூல்நிலையத்திலுள்ள ஏட்டுப்பிரதியிற் காணப்பட்ட சில தோத்திரப் பாடல்களைப் பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள் தந்துதவினார்கள். இன்னும் நான் தேடிக்கொண்டிருந்த சிற்சில நூல்கள் எதிர்பாராத முறையில் முருகன் அருளால் என் கைக்கெட்டின. அங்ஙனம் பல நூல்கள் சேர்ந்துவிட்டன. அவற்றுட் சிறந்தனவாகவுள்ள சில பாடல்களை என் அறியாமை காரணமாக இந்நூலிற் சேர்க்காது விட்டிருப்பின், அன்பர்கள் எனக்கு அறிவிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். அடுத்த பதிப்பில் வேண்டிய திருத்தங்களைச் செய்துகொள்ளலாம்.

இந்நூல் அமைப்புமுறை முழுவதற்கும் அதற்கேற்ற படங்களைத் தெரிந்தெடுத்து புளொக்குகள் தயாரிப்பதற்கும் கொழும்பு வானொலி நிலையத்துப் பிரதம தமிழ் அறிவிப்பாளர் திரு. சோ. சிவபாதசுந்தரம் அவர்கள் அநேக உதவிகளைச் செய்துதந்தார்கள். கொழும்பு, கதிர்காமத் தொண்டர் சபை உபதலைவர் திரு. எம். எஸ். திருவிளங்கம் அவர்கள் தாம் அரிதின் முயன்று சேகரித்த கதிர்காமக் கோயிற் சரித்திர ஆராய்ச்சிக் குறிப்புகளையெல்லாம் எனக்குத் தந்துதவினார்கள். என் நண்பர் வெள்ளவத்தை திரு. மு. இராமலிங்கம் அவர்களும் தாம் பலவருடங்களாக

முயன்று சேகரித்து வைத்திருந்த சரித்திரக் குறிப்புக் களைத் தாராளமாகத் தந்துதவினார்கள். ஆடி வேல் விழாவைப்பற்றிய சில குறிப்புக்களை திரு எம். மாணிக்கம் செட்டியார் அவர்கள் தந்துதவினார்கள். காவடி விழாவைப்பற்றிய குறிப்புக்களை பளையகாட் கம்பனி மனேஜர் திரு. ருமு. வைத்தியநாத முதலியார் அவர்கள் தந்துதவினார்கள்.

வித்தியாபகுதித் தமிழ்ப் பாட நூல் மொழி பெயர்ப்பாளர் திரு மு. கணபதிப்பிள்ளை அவர்கள் இந்நூலின் 'புறூவ்' பிரதிகளை என்னுடன் இருந்து பார்த்துப் பல திருத்தங்களைச் செய்து தந்தார்கள். கொழும்பு விவேகானந்தசபை வித்தியாசாலை ஆசிரி யர் பண்டிதர் க. சிவசம்பு அவர்கள் 'புறூவ்' பிரதிகளை இடைக்கிடை பார்வையிட்டும், நூல் விரைவில் வெளி வருவதற்கு வேண்டிய பல உதவிகளையும் செய்தார் கள். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போல், பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை அவர்கள் கொழும்புத் தமிழ்ச்சங்க ஆண்டு விழாவிற் சொற் பொழிவாற்றக் கொழும்புக்கு வந்தார்கள். அவர்க ளும் ஏட்டுப் பிரதிகளிலுள்ள வழுக்களைக் களைந்து தந்தார்கள்.

மட்டக்களப்புப்பகுதியிலுள்ள தோத்திரப் பாடல் களை சென்ற் ஆன் கல்லூரி ஆசிரியர் திரு. மு. இராச ரத்தினம் அவர்கள் அரிதின் முயன்று சேகரித்து அனுப்பி வைத்தார்கள். அவை மிகவும் பின்னரே கிடைத்தமையால் இந்நூலில் இடம்பெறமுடியவில்லை. திருவருள் கூட்டிவைப்பின், அடுத்த பதிப்பில் அவை சேர்த்துக்கொள்ளப்படும்.

இந்நூலை அழகுற அச்சிடுவதில் திருமகள் அழுத்தக அதிபர் திரு. நா. பொன்னையா அவர்களும், அழுத்

தக அலுவலகத்து திரு. மூ. சபாரத்தினம் அவர்களும் எடுத்துக்கொண்ட ஊக்கம் இம்மாத்திரமன்று. அவர்களுடைய உதவியின்றேல் இந்நூல் இவ்வளவு விரைவில் வெளிவந்திராது. இங்ஙனம் பல வழியாலும் எனக்கு உதவிபுரிந்த மேற்கூறிய அன்பர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி உரித்தாகுக

இந்நூலுக்குச் சிறப்புப்பாயிரம் எழுதி யுதவிய என் தமிழ் ஆசிரியர் சிவங். கருணாலயபாண்டியப் புலவர் அவர்கட்கும், முகவுரை எழுதி யுதவிய பரமேஸ்வரக் கல்லூரி அதிபர் திரு. சு. நடேசபிள்ளை B. A., B. L. அவர்களுக்கும் என்றும் கடப்பாடுடையேன். இவ்வன்பர்கள் எல்லோர்க்கும் கதிர்காமநாதன் திருவருள் பாலிக்கவேண்டுமென அவன் திருப்பாதங்களைச் சிந்தித்து வாழ்த்தி வணங்குவதன்றி வேறென்செய்ய வல்லேன்.

*விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள்*
*மெய்மைகுன்றா*
*மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள்*
*முன்புசெய்த*
*பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும்*
*பயந்ததனி*
*வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன்*
*மயூரமுமே.*

— கந்தரலங்காரம்

வெள்ளவத்தை
2-8-47

**குல. சபாநாதன்**

பரமேஸ்வரக்கல்லூரி அதிபரும்
இலங்கை அரசாங்கசபை அங்கத்தவருமான
**திரு. சு. நடேசபிள்ளை B. A., B. L. அவர்கள் அளித்த**

# அணிந்துரை

ஆண்டு தோறும் ஆடி மாதத்திற் பல்லாயிரக் கணக்கான மக்கள் பக்தி பரவசராய் யாத்திரை செய்து வழிபாடியற்றும் அற்புதத் தலமாகிய கதிர் காமத்துக்கு ஓர் ஆற்றுப்படையாக இந்நூலைத் திரு. குல. சபாநாதன் அவர்கள் அமைத்துத் தமிழகத் துக்கு அளித்துள்ளார்கள்.

தெள்ளத்தெளிந்த உரைநடையிற் கதிர்காமத்தின் இயற்கை வனப்பையும் தெய்வீக மகிமையையும் இந் நூல் புலப்படுத்துகின்றது. இத்தலத்தைப்பற்றிய பல வரலாறுகளும் இந்நூலிற் கூறப்படுகின்றன. அருள்வாக்குப் பெற்ற அருணகிரிநாதர் பாடியருளிய கதிர்காமத் திருப்புகழ்ப் பாடல்களோடு கதிர்காமக் கலம்பகம், கதிர்காமப்பிள்ளைத்தமிழ் முதலிய பிர பந்தச் செய்யுள்களும் இந்நூலிற் சேர்க்கப்பட்டுள் ளன. இச் செய்யுட் கோவை இந்நூலுக்கு ஒரு தனிச் சிறப்பை அளிக்கின்றது. இதுகாறும் அச்சில் வெளிவராத சில பழைய பாடல்களை அரிதின் முயன்று இந்நூலாசிரியர் சேர்த்துள்ளாரென்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

இத்தகைய நூல்கள் இக்காலத்தில் அவசியம் வேண்டற்பாலன. ஆராய்ச்சி ஆற்றலும் தமிழார்வ மும் நிரம்பப்பெற்ற திரு. சபாநாதன் அவர்கள் ஈழ நாட்டிலுள்ள வேறு புராதன தலங்களைப் பற்றியும் நூல்கள் வெளியிடுவார்களென்று தமிழுலகம் எதிர் பார்க்கின்றது.

இராமநாதன் கல்லூரி,
இணுவில், சுன்னாகம்.
22-7-47

**சு. நடேசபிள்ளை**

திருநெல்வேலித் தமிழ்ப் பெரும் புலவரும்,
கொழும்பு விவேகானந்தசபை இயற்றமிழாசிரியரு மாகிய
**சிவங். கருணாலயபாண்டியனார் அவர்கள் அளித்த**

# சிறப்புப்பாயிரம்

**நேரிசையகவல்**


நனிசுவை தளிர்ப்ப நவையற வட்ட
அடிசிலுட் சிறிதெடுத் தங்கையி னமைத்துக்
கைம்மக வூட்டுங் கைத்தாய் பொருவ
ஈழவக் கதிரைக் காழகில் வரைக்கீழ்
இம்மையின் மக்க ளிடர்வினை கழூஉங்
கவின்மணி யாற்றங் கரைமருங் கொருசார்க்
கோயில் கொண்ட குழகன் றிருவருள்
வானோர் மருந்தினு மாணச் சுவைமுதிர்
புகழி னொருசிறு புடைபடு கூற்றினைச்
சான்று பொதுளித் தகவுறத் தோன்றவுந்
தற்குறிப் பேற்றச் சொற்சுவை முதலா
நயம்பல வமைந்து நவிலுநர்ப் பிணிப்பவுஞ்
செந்தமிழ்க் கடவுளெஞ் செவ்வே ளென்று
வந்த பெருமை வாய்ப்பு முனைப்பவு
முருகன் றிருவருள் பெருகல் வேண்டுமென்
றுளங்கொள் பான்மை யோங்குபு தோன்றவுங்
கனிவு மிக்குக் காண்டகப் பாடு
மறிஞர் மாட்டுள வார்வந் ததும்பவுங்
கண்புரை காதற் கதிரையம் புலமிசை
யன்புமெய்ப் பாடு தன்புறம் பொசியவும்
யாவரும் புலங்கொ ளியற்சொ னடையிற்
றிருக்கதிர் காம மெனப்பெயர் தந்து
சிற்றுரை செய்யுட் டிரட்டொடு தொகைஇ
முன்னிய கதிரை வழிச்செலுந் தமர்க்கு

வாயுறை புகட்டி வழிப்பட வுய்த்தனன்
பாய்தரு புகழ்செலப் பாங்குபட் டொழுகிக்
கல்வித் துறைப்பணிக் கடமை யாற்றுஞ்
சாலநல் லறிஞன் றகுசபா நாதன்
யாவரும் விழைதக மேவரு பண்பினன்
கோதில் கரம்பைக் குலசே கரன்சேய்
தன்னு வியன்ற தாவி லூழிய
மென்னு னுங்கதி ரெழில்வரை
யன்னுற் கியற்றுவ லருள்பெறற் கெனவே.

*புலவர்—பாண்டியனார்*

குறுவைத்தோட்டம்
*14-7-47*





கதிர்காமம் — கோயில் முகப்பு

# முருகவழிபாடு

உலகத்திலே மக்கள் முதன்முதல் தோன்றிய விடம் குறிஞ்சிநிலமென்பது ஆராய்ச்சியாளர் துணிபு. கரந்தைத் திணையின் துறைகளுள் ஒன்றாய குடிநிலை யென்பதற்கு எடுத்துக்காட்டிய,

> "பொய்யகல நாளும் புகழ்விளைத்த லென்வியப்பாம்
> வையகம் போர்த்த வயங்கொலிநீர் — கையகலக்
> கற்றோன்றி மண்டோன்றாக் காலத்தே வாளோடு
> முற்றோன்றி மூத்த குடி."

எனும் புறப்பொருள்வெண்பாமாலையின் அரிய பழஞ் செய்யுளும் இப் புதிய வாராய்ச்சித் துணிபினை முன்னரே எடுத்துக் கூறியிருத்தல் மகிழ்ச்சிக்குரிய தொன்று. பண்டைக்காலத்தில் 'பேராழி யுலகனைத்தும் பிறந்தகலி யிருணீங்க, வோராழி தனைநடத்தும் ஒண்சுடர்' தவறுதலின்றி நாடோறும் தோன்றிப் பயனளித்து வருதலால் அதன் இன்றியமையாமையை உணர்ந்த மக்கள் அச் சுடராகிய சூரியனையே கடவுளாக வழிபட்டனர். அறிவு முதிர முதிர, அஞ்ஞாயிற்றினை நம்முடைய உடம்புபோலவும் கல் முதலியனபோலவும் ஓர் உயிரற்ற பொருளாமென அறிந்த மக்கள், அதனை இயக்குதற்கு வேறொன்றின் சக்தி இருக்கவேண்டுமென ஆராய்ந்து அதன் இயல்பினைக் கண்டுகொண்டனர். ஞாயிற்றினூடாகத் தெரியவந்த சக்தியோடு கூடிய உயிர்ப் பொருளாகிய பரசிவத்தினிடம் என்றும் இளமையும் அழகும் காணப்பெற்று

வியந்து மகிழ்வுற்று, அவை வாயிலாக அப்பொருள் படும் முருகன் எனப் பெயரிட்டு வழிபட்டு வந்தனர். முருக வழிபாட்டிற்கும் சிவ வழிபாட்டிற்கும் பேதம் ஒன்றுமில்லை. இவை இரண்டும் ஒன்றுதான்.

''ஆதலின் நமது சத்தி யறுமுக னவனும் யாமும்
பேதக மன்று னம்போற் பிரிவிலன் யாண்டு நின்றான்
ஏதமில் குழவி போல்வான் யாவையு முணர்ந்தான் சீரும்
போதமு மழிவில் வீடும் போற்றினர்க் கருள வல்லான்.''

என்று கந்தபுராணப் பாசுரம் விளக்கியிருத்தல் காண்க.

முருகன் என்னுஞ் சொற்கு என்றும் இளமை அழகுடையான் என்பது பொருள். இதனால், பழங் காலத்துத் தமிழ்மக்கள் ஒவ்வொரு பொருளிடத்தும் அழகினை ஊடுருவிப் பார்த்து வந்தனரென்பதும், அவ் வழகின் கவர்ச்சியால் அதனையே கடவுளாகப் போற்றி வந்தனர் என்பதும் தெரியப்படும். இவ்வாறு ஒவ்வோ ரியற்கைப் பொருளிடத்தும் வேறு வேறாகப் பரசிவம் காணப்படும் என்னும் உண்மையினை,

'' இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி
இயமான னாயெறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாச மாயட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருருவுந் தம்முருவுந் தாமே யாகி
நெருநலையாய் இன்றாகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே.''

எனும் திருத்தாண்டகம் புலப்படுத்துகின்றது.

அஞ்சுமுகந் தோன்றில் ஆறுமுகந் தோன்றுவது மல்லாமல் அவன் ஒருவனே ஆறு சமயங்கள்தொறும்

எழுந்தருளியிருக்கின்றான் என்கின்றார் சிதம்பர சுவாமிகள் :

"ஆறுசம யக்கடவுள் வேறுவே றின்றியான்
' ஒருவனே யங்கங்கிருந்
தன்பர்க்கு முத்திதரு வித்தென்று யாவர்க்கும்
அறிவித்த வதனமணியே."

என்பது திருப்போரூர்ச் சந்நிதிமுறை.

முருகனுடைய மூவிருமுகங்களும் பொழியும் கருணையைப் போற்றுதார் இலரெனலாம். "மூவிரு முகங்கள் போற்றி, முகம்பொழி கருணை போற்றி" என்றும்,

"அருவமு முருவு மாகி
யநாதியாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்க ளாறுங்
கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்
குதித்தன னுலக முய்ய."

என்றும் உளங்குளிரக் கூறியிருப்பினும், முகக்கருணையினை முற்றக் கூறமுடியுமா? முருகக்கடவுள் தமிழ்ச் சங்கத்தே வீற்றிருந்து தமிழாராய்ந்தார் எனக் குறிப்பிடப்படுதலால், தமிழர்கள் பழங்காலந் தொடக்கம் வழிபட்டுவந்த கடவுள் முருகக்கடவுளே யென்பது பெறப்படும். இன்னும் தமிழ்நூல்கள் பல முருகன் பெருமையை எடுத்துரைத்தலும், அவன் எழுந்தருளியிருக்கின்ற ஆறுபடை வீடுகளும் தமிழகத்தின்கண்ணேயே அமைந்து கிடத்தலும் மறுக்கமுடியாத பெருஞ்சான்றுகள். மிகப் பழைய நூலாகிய தொல்காப்பியத்திலும் 'சேயோன் மேய மைவரை யுலக'

மெனக் குறிஞ்சிநிலத்துக் கடவுளாக முருகன் கூறப் படுதலால், அவன் தமிழர்க்கே யுரிய கடவுள் என் பதில் ஐயமுண்டோ?

தமிழகத்தில் முருகனை வழிபடுவோர் பெருந் தொகையினராகப் பெருகுகின்றனர். 'ஒரு முருகா' வென நினைத்தவுடன் 'மயிலேறி அயிலெடுத்துவருஞ் செவ்வேள்!' வசப்படாத தமிழனும் இருக்கமுடியுமா? முருகனது கமலத் தாளினையுந் தோளினையுஞ் சிந்திப்போமாயின் நமது பழவினைகளெல் லாம் சிந்திப்போம் என்பதற் கையமுண்டா? செவ் வேள் திருக்கைவேலினை ஞானசக்தியாகவும், வள்ளி நாயகியாரை இச்சா சக்தியாகவும் தெய்வயானை அம்மையாரைக் கிரியா சக்தியாகவும் கொள்ளலாம்.

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே.

—கந்தரநுபூதி

பத்தித் திருமுக மாறுடன் பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கு மமுதுகண் டேன்செயல் மாண்டடங்கப்
புத்திக் கமலத் துருகிப் பெருகிப் புவனமெற்றித்
தத்திக் கரைபுர ளும்பர மானந்த சாகரத்தே.

பெரும்பைம் புனத்தினுள் சிற்றேனல் காக்கின்ற
பேதைகொங்கை
விரும்புங் குமரனை மெய்யன் பினால்மெல்ல
மெல்லவுள்ள
அரும்புந் தனிப்பர மானந்தந் தித்தித்
தறிந்தஅன்றே
கரும்புந் துவர்த்துச்செந் தேனும் புளித்தறக்
கைத்ததுவே.

—கந்தரலங்காரம்

# கதிரகாமம்

முருகவழிபாட்டுக்குரிய திருப்பதிகளுள் மூர்த்தி தலம் தீர்த்தம் எனு மும்மையானும் புகழ்பெற்றுத் திகழ்வது ஈழநாட்டின் தென்பாலுள்ள திருக்கதிர் காமம். இத் தலத்தின் பெயர்க்காரண வாராய்ச்சி இன் னும் முடிந்தபாடில்லை. **கதிரகாம** என்னுஞ் சொல் 'கார்த்திகேய கிராம' என்பதன் மரூஉவெனவும், யானைவாழ் கிராமமெனப் பொருள்படும் **கஜரகம** என்பதன் சிதைவெனவும், கதிரு (நச்சு)மரம் நிறைந்த கிராமம் (கதிருகொட என்பதுபோல) எனப் பொருள் படும் **கதிருகிராம** என்பதன் சிதைவெனவுங் கொள்வர் சிலர். இன்னுஞ் சிலர் இதனைத் தமிழ்ச் சொல் லெனவே கொண்டு **கதிர்காமம்** என்பது கடவுள் தன்மையுடைய ஒளியும் அன்பும் (கதிர்—ஒளி ; காமம் —அன்பு) கலந்து விளங்குமிடம் எனவும், ஆறு கதிர்ப்பொறிகளாற் பிறந்த ஆறுமுகன் வள்ளிநாச்சி யார்மேற் காதல்கொண்டு மணம்புரிந்த இடமாதலிற் கதிர்காமம் ஆயிற்று எனவுங் கூறுவர். இன்னுஞ் சிலர் 'கதிரங் கருங்காலி' யெனும் பிங்கல நிகண்டுச் சூத்திரத்தை எடுத்துக்காட்டிக் கதிரமரம் (கருங்காலி மரம்) நிறைந்த கிராமமாதலால், இப் பெயர் ஏற்பட்ட தென்பர். **கதிரகாமம்** என்பது சிங்களமொழிச் சொல் லின் மரூஉவாய்த் தமிழ்மொழியின்கண் திசைச் சொல்லாய்ப் பிற்காலத்து வழக்கில் வந்ததென்பதே எமது கொள்கை. அக் கொள்கைக்கேற்பக் கதிரு மரங் களையுடைய ஊர் எனப் பெயர்க்காரணம் கூறுதலே பொருத்தமாகத் தோற்றுகின்றது.

ஏமகூடம், பூலோககந்தபுரி, காரிகாப்பு, வரபுரி, **பஞ்சமூர்த்திவாசம், வில்வகானனம், சகலசித்திகரம்,**

அகத்தியப்பிரியம், பிரமசித்தி, அவ்வியர்த்தமூர்த்தம், சித்தகேத்திரம், கதிரை, ஜோதிஷ்காமம் என்பன கதிர்காமத்துக்குப் பல நூல்களிலும் வழங்கப்பட்டுள்ள பெயர்கள்.

கதிர்காமசுவாமி, கதிரைநாயகன், கதிரைவேலன், மாணிக்கசுவாமி, கந்தக்கடவுள், ஆறுமுகப்பெருமான், பரஞ்சோதிப்பெருமான்,சிதாகாயநாதன், அவ்வியர்த்த மூர்த்தி என்ற திருநாமங்கள் கதிர்காமக் கடவுளுக்கு வழங்கப்படுவன.

## புராணவரலாறு

**மு**ருகவேள் சூரபன்மனைச் சங்கரிக்கும் நோக்கொடு எழுந்தருளியபொழுது கதிர்காமத்தையடைந்து மாணிக்க கங்கையருகிற் பாசறை வகுத்து வீற்றிருந்தார் என்றும், அவ்விடம் ஏமகூடம் எனப்பட்டது என்றும், பின்னர்ச் சூரபன்மனை வென்று வாகைசூடி மீண்டபொழுது கதிர்காமக் கிரியில் நவகங்கா தீர்த்தமுண்டாக்கிச் சிந்தாமணி யாலயத்தில் தேவர்கள் துதிக்க வீற்றிருந்தார் என்றும் புராணம் கூறுகின்றது. வள்ளிநாயகியாரைக் கண்டு காதலித்து மணமுடித்த இடம் கதிர்காமமென்பது ஐதிகம். முருகப்பெருமான் முதலில் தெய்வயானை அம்மையாரை மணமுடித்துப் பின் திருத்தணிமலைக்கருகிலுள்ள வள்ளிமலையில் வள்ளிநாயகியாரை மணம்புரிந்து அதன்பின்னர் இருவரையும் நோக்கித் தாம் விரும்பும் தலம் கதிர்காமம் எனக் கூறி அவர்களுடன் கதிர்காமக் கிரியை அடைந்து சிந்தாமணி யாலயத்தில் எந்நாளும் அன்பர்கள் வழிபட்டுய்யுமாறு வீற்றிருக்கிறார் எனத் தக்ஷிண கைலாச புராணம் கூறும். "பிள்ளையார் மலை, வீரவாகு மலை, தெய்வயானையம்மை மலை, வள்ளியம்மை மலை ஆகிய மலைகளின் நடுவே சோமன் சூரியன் அக்கினி

யென்னும் முச்சுடர்களின் சோதிபெற்று உலகுக்கெல்லாம் பேரொளியாய் விளங்குவது கதிரைமலை'' என்றும், ''அம்மலைச்சிகரநடுவில் அநேககோடிசூரியப் பிரகாசம் பொருந்தி விளங்கும் சிந்தாமணி ஆலயத்தில் நவரத்னமயமான சிங்காதனத்தில் வள்ளிநாயகி தெய்வயானையம்மை சமேதராய்க் கதிர்காமகிரீசர் எழுந்தருளியிருக்கிறார்'' என்றும் இப் புராணம் கூறும். மேலும், கதிர்காம நகரச் சிறப்பினையும் இப் புராணம் கீழ்க்காணுமாறு குறிப்பிடுகின்றது: ''கதிர்காம நகரம் முக்கோணவடிவமான வீதியையுடையது. அந் நகரத்தின் நடுவிலே பவளத்தூண்கள் நிறுத்திப் பொன்னால் இயற்றி இரத்தினங்கள் இழைத்த திவ்வியமாகிய சோதிமண்டபம் (சுவாமி சந்நிதி) ஒன்றிருக்கின்றது. அம் மண்டபத்தின் நடுவில் இந்திரநீலமணியினாற் செய்து பிரகாசமும் அழகும் பொருந்திய சிங்காசனத்தின் மேலே தெய்வயானையம்மையார் வள்ளியம்மையார் என்னும் இரு சக்திகளோடு ஞானசக்தி வடிவாகிய வேற்படையைத் தாங்கிக் கிருபா சமுத்திரமாகிய கதிர்காமநாதர் விளங்குகிறார். அச் சோதிமண்டபத்தின் எதிரிலே எல்லா இலக்கணமும் வாய்ந்த வள்ளியம்மை மண்டபம் இருக்கின்றது. அதன் அருகிலே மேன்மை பொருந்திய சமாதி யோக மண்டபம் ஒன்றிருக்கின்றது. விநாயகருக்கும் பரமசிவனுக்கும் உரிய வேறு மண்டபங்களும் அங்குள்ளன. வீரவாகு முதலான வீரருக்குரிய மண்டபங்களும் இருக்கின்றன............ கதிர்காம நகரத்தருகிற் புண்ணிய நதியாகிய மாணிக்க கங்கை பாய்ந்துகொண்டிருக்கும்.''

## சரித்திரம்

**பு**ராணங்களிற் பலவாருகக் கூறப்பட்டபோதிலும் கதிர்காமக்ஷேத்திரத்தின் புராதனமும் பெருமை

யும் சரித்திரங்களிற் காணப்படுகின்றன. யாழ்ப் பாண வைபவமாலையிலும் மகாவம்சம் என்ற சிங்கள சரித்திரத்திலும் கதிர்காமத்தைப் பற்றிய உண்மைக் குறிப்புக்கள் காணப்படுகின்றன.

சீதாபிராட்டியாரைத் தேடி இலங்கைக்கு வந்த அநுமான் கதிர்காமப் பெருமானை வணங்கிச் சென்றா னென்பது சில சரித்திராசிரியர் கொள்கை. கி. மு. 500-ம் ஆண்டளவில் விஜயன் இலங்கைத் தீவில் கதிரையாண்டவருக்கு ஒரு கோயில் அமைத்தான் என **யாழ்ப்பாண வைபவமாலை** கூறும். சிங்களரின் சரித் திர நூலாகிய மகாவம்சத்தில், [1] தேவாநம்பியதீசன் ஆட்சிக்காலத்தில், அசோக மன்னனது அருந்தவப் புதல்வி சங்கமித்தை வெள்ளரசுடன் அநுரதபுரியை யடைந்தபொழுது, இலங்கை அரசனுக்கு அடுத்தபடி யாகக் கஜரகாமத்துப் பிரபு குறிப்பிடப்படுகின் றான். இவ் வரசின் கிளையொன்று இப் பிரபுவால் கதிர் காமத்துக்குக் கொண்டுவரப்பட்டு ஆலயத்தில் நாட் டப்பட்டதாகவும் அந்நூல் கூறும். இப்பொழுது கதிர்காமக் கோயில் வீதியிற் காணப்படும் வெள் ளரசு இதனடியிற் றோன்றியதெனக் கருதுவர். கி. மு. 300-ம் ஆண்டளவில் மகாநாகன் என்னும் அரசனாற் கட்டப்பெற்ற கிரிவிகாரை என்னும் பௌத்த விகா ரம் ஒன்று கதிர்காமக் கோயிலுக்குச் சிறிது தூரத்தி லிருக்கின்றது. இதனைச் சாதாரண மக்கள் **சூரன்கோட்டை** என்று வழங்குவர்.

துட்டகெமுனு எனும் சிங்களவரசன் எல்லாளன் எனும் புகழ்பெற்ற தமிழரசனை வெல்லுதற்குரிய ஆற் றலைத் தமக்களிக்கவேண்டுமெனவும், அளிப்பிற் கதிரை யாண்டவர் ஆலயத்தைக் கட்டுவிப்பதாகவும் விரதம்

---

1. Mahavamsa: ch. XIX

பூண்டு அக்கடவுள் அருள் பெற்றுத் தன் பகைவனை வென்றதால் தான் கூறியபடியே கி. மு. 101-ம் ஆண்டளவில் ஆலயத்தைக் கட்டியதாகவும் கந்தஉபாத எனுஞ் சிங்கள நூல் கூறுகின்றதெனச் சேர் பொன். அருணசலம் துரையவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.[1]

இலங்கை சோழர் ஆட்சிக்குட்பட்டபொழுது சிங்கள அரசனாகிய ஐந்தாம் மகிந்தனும் அவன் மனைவிமாரும் சிறைப்படுத்தப்பட்டனர். இங்ஙனம் சிறைப்பட்ட அரசனின் வழித்தோன்றலாய மானவர்மன் எனுஞ் சிறந்த கல்வியாளன் முருகப்பெருமானின் அருள்பெற வேண்டிப் பல்லாண்டுகளாகத் தவஞ் செய்து தனது கண்மலரையே அர்ச்சித்து ஈற்றில் அவன் அருளைப்பெற்றுத் தனது சாதியினரை வருத்திய சோழரை இவ்வூரினின்றும் இந்த மானவர்மனின் சந்ததியார் துரத்த முடிந்ததென மகாவம்சம்[2] விரிவாகக் கூறுகின்றது. இவன் சிறந்த முருக பக்தன் என்பதையும் இந்நூல் கூறுமற் கூறிவிட்டது.

இப்பொழுது காணப்படும் கதிர்காம ஆலயம் கி. பி. 1581-ம் ஆண்டளவில் அரசுபுரியத்தொடங்கிய முதலாம் இராசசிங்கனாற் கட்டப்பெற்றதென்பது திரு. வ. குமாரசுவாமியவர்கள் கருத்து.[3] இவன் பௌத்த சமயத்தை அலட்சியஞ் செய்து, சைவசமயத்தைக் கடைப்பிடித்தொழுகி 'பைரவ ஆண்டி' கோயிலைக் கட்டுவித்தான் என மகாவம்சம் கூறுகின்றது.[4] ஆனால் இப்பொழுது காணப்படும் ஆலயம்

1. The Worship of Muruka by Sir. P. Arunachalam
2. Maha-vamsa ch. 57.
3. கதிரைமலைப்பள்ளு: திரு. வ. குமாரசுவாமி அவர்கள் பதிப்பு: ஆராய்ச்சிக்குறிப்புகள் பக். 38.
4. Mahavamsa ch. 94.

கி. பி. 1634-ம் ஆண்டளவில் அரசாண்ட இரண்டாம் இராசசிங்கனுற் கட்டப்பட்டதென்பதே சரித்திராசிரியர் துணிபு.[1]

## கதிர்காம க்ஷேத்திரம்

ஈழநாட்டின் தென்பாகத்தில் ஊவா மாகாணத்து புத்தல் பிரிவிலுள்ள தீயனகம எனும் காட்டில் மாணிக்க கங்கை அல்லது பரப்ப ஓயாவின் இடது கரையில் கதிர்காமக் கடவுள் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கின்ருர். இக் கோயில் புத்தலிலிருந்து 26 மைல் தூரத்திலும், அம்பாந்தோட்டையிலிருந்து 59 மைல் தூரத்திலும், திசமஹாராமாவிலிருந்து 10½ மைல் தூரத்திலும் உள்ளது. கதிர்காம க்ஷேத்திரத்தில் அநேக கோயில்கள் இருக்கின்றன. கதிர்காம நாதன் சந்நிதி தெற்குநோக்கியும் வள்ளியம்மன் சந்நிதி வடக்கு நோக்கியும் இருக்கின்றன. தனது புதிய மனைவியை எப்பொழுதும் பார்த்தவண்ணம் இருக்க வேண்டுமென்ற விருப்பினுற் கதிர்காமநாதர் இக் கோயில்களை இங்ஙனம் அமைத்துக்கொண்டார்போலும். இச் செயலைக் கண்ட தெய்வயானையம்மையார் தமது கோயிலைக் கிழக்கு நோக்கி யமைத்துக்கொண்டார். வள்ளியம்மையாருக்கு அடிமை பூண்ட முத்துலிங்கசுவாமி மாணிக்க கங்கையைக் கடந்துவரும் அடியார்களை அன்புடன் உபசரித்து முருகனிடம் ஆற்றுப்படுத்தும் கருத்துடன் மேற்குத் திசையை நோக்கித் தமது கோயிற் சந்நிதியை யமைத்துக்கொண்டார். கதிர்காம க்ஷேத்திரத்திலுள்ள கோயில்களை நான்கு வகுப்பாக வகைப்படுத்தலாம் : முதலாவது வகுப்பில், (1) உருகுணை மகா கதிர்காம ஆலயம் அல்லது சுவாமி

1. Vide Worship of Muruka by Sir. P. Arunachalam and 'Katragama' by Mudaliyar C. Rasanayagam.

சந்நிதி. (2) வள்ளியம்மன் கோயில். (3) பத்தினி கோயில்—கண்ணகியம்மன் கோயில்—இவை மூன்றும் அடங்கும். இம் மூன்று கோயில்களும் பௌத்தமத ஆலய பரிபாலனச் சட்டத்தின்படி பரிபாலிக்கப்பட்டு வருகின்றன. இரண்டாவது வகுப்பில் (1) மாணிக்கப் பிள்ளையார்கோயில். (2) தெய்வயானை அம்மன்கோயில். (3) வயிரவர்கோயில். (4) முத்துலிங்கசுவாமிகோயில். (5) செல்லக்கதிர்காமம் அல்லது பழையகதிர்காமம். இது சுவாமிசந்நிதியிலிருந்து 3 மைல்தூரத்திலுள்ளது; இதன்கண் இப்பொழுது ஒருபிள்ளையார்கோயிலுண்டு. (6) கதிரைமலை — இவை ஆறும் அடங்கும். இவை பெரும்பாலும் பாபாக்களின்* அதிகாரத்தின்கீழ் இருக்கின்றன. மூன்றாவது வகுப்பில் (1) கிரிவிகாரையும் (2) பெருமாள் கோயிலும் அடங்கும். இவை பௌத்த குருமாரின் பரிபாலனத்தில் இருக்கின்றன. நான்காவது வகுப்பிற் சோனகருடைய பள்ளிவாசல் அடங்கும். இவற்றைவிட வேறு சில சிறு கோயில்களும் காலத்துக்குக்காலம் கட்டப்பெற்றுள்ளன

கதிர்காமநாதன் தேவாலயத்திற் பெரிய கோபுரத்தையாவது விமானத்தையாவது யாம் காணமுடியாது. கர்ப்பக்கிரகமும் சிறு மண்டபமும் கொண்டதே கோயில் எனப்படும். கர்ப்பக்கிரகத்தின் வாசலில் திரையிடப்பட்டிருக்கிறது. வெளி மண்டபத்தில் நின்றே மக்கள் வழிபடவேண்டும்

கதிர்காம வேலருக்குப் பூசை செய்பவர்களைக் கப்புராளைமார் என்றழைப்பது வழக்கம். கப்புராளைமார் இக்கோயிலிற் பூசை நடத்தும் முறையும் இக்காலச் சைவமுறைக்கு வேறுபட்டதாகும். வள்ளிமணாளனுக்குப் பூசை நிகழும்பொழுது அவனை வரவேற்ப

* ஒரு வட இந்திய வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

தற்கு ஆலாத்திப்பெண்கள் நாடோறும் வந்துஆலாத்தெடுப்பார்கள். கோயிலுக்கு வெவ்வேறு தொழில் புரியும் மேளகாரர், ஜோதிடர் முதலிய பலருளர். இவர்களுக்கெல்லாம் மானியம் விடப்பட்டிருக்கிறது.

கப்புராளைமார் தம் வாயை மஞ்சள் துணியினுற் கட்டி, அமுதினை உள்ளே காவிச்சென்று வைத்தபின்னர் வெளியேவந்து திரைச்சீலை முன்பாக நின்று ஓங்காரவடிவாகக் கைகளிரண்டையும் கூப்பி வழிபாடியற்றுகின்றனர். "ஒருவன் தான் வேறு எதைத்தான் செய்ய முடியாதிருந்தாலும், தன் இரு கைகளையும் சிரசின் மேற் குவித்து வழிபடுவதால், அவனுடைய உருவம் வேலின் உருவத்தை ஒக்கும்; அப்பொழுது அவன் வேலாகி, வீரன் கை வேலாகிவிடுவான்" என்று, கதிர்காம தலத்தை விய வருஷப்பிறப்பன்று தரிசித்த திருப்புகழ்மணி டி. எம். கிருஷ்ணசாமி ஐயரவர்கள் கூறியதும் இவ்விடத்தில் நினைக்கத்தக்கது.

திருவிழாக்காலங்களிற் சந்நிதானத்துள் இருந்து ஏதோ ஒரு வஸ்துவைக் கப்புராளைமார் பெரிய வஸ்திரத்தால் மூடி ஒருவருக்கும் அது இன்னதெனத் தெரியாவண்ணம் கொணர்ந்து யானை மீதுள்ள பெட்டியினுள் வைத்து இறுகக் கட்டிவிடுகின்றனர். கப்புராளையார் தமக்குள் ஒருவரைத் தெரிவுசெய்து அவரைச் சுவாமிக்கப்புராளை யென்றழைப்பது வழக்கம். இந்தச் சுவாமிக் கப்புராளையே யானைமீதுள்ள பெட்டியை மிகக் கவனமாகப் பிடித்துக்கொள்வார். இந்த மறை பொருளைக் கப்புராளைமாரும் பயபக்தியுடனே தான் ஏற்றி இறக்குகின்றனர். இப்பொருளே சுவாமி சந்நிதியிலிருந்து வள்ளியம்மன் சந்நிதிக்கு யானைமீதமர்ந்து உலாப்போவது. அடியார்கள் தம் தலைமேல் அல்லது கைமேற்கொண்டு செல்லும் விபூதிச் சட்டி

யில் ஏற்றிய கர்ப்பூர வெளிச்சம் கதிர்காமத்தில் இர வினைப் பகலாக்க, ஊதுபத்திகளின் நறுமணம் பரவ, பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் 'அரோஹரா' என்று கதறிக் கண்ணீர் சொரிய, கதிர்காமக் கடவுள் உலாப்போகுங் காட்சி கண்கொள்ளாக் காட்சியா யிருக்கும். முத்துலிங்கசுவாமிஅவர்கள் அமைத்த இயந் திரம் அடங்கிய பெட்டியே விழாக்காலத்திற் பவனி வரும்போது யானைமேல் ஏற்றிச் செல்லப்படுகின்ற தெனக் கொள்வாருமுளர். இதனை முத்துலிங்கசுவாமி யவர்கள் சரித்திரத்தைக் கூறுமிடத்து விளக்குவாம்.

ஒரு பற்றுமற்று அருவாய்த் தானே நிற்கும் தத்து வங் கடந்த பொருளை வழிபடும்முறையே, அஃதாவது, கந்தழி வழிபாடே கதிர்காமத்தில் உண்டென்பது ஆராய்ச்சியாளர் சிலர் துணிபு. கந்தழி வழிபாடெனிற் கோயிலமைத்தல் அவசியமின்றாகிவிடும். மேலும், வேட்டுவர் கந்தழி வழிபாடாற்றும் நுண்மதி யுடையரோவென்பதும் இங்கு ஆராயத்தக்கது. அனற் பிழம்பு வடிவமே இங்குக் கர்ப்பூர தீபமாக இன்றும் நிலைத்து நிற்கின்றதெனக் கொள்ளற்கிடமுண்டெனி னும், துணிந்துகூற முடியாது.

அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்ப் போக்கினை நோக்குமிடத்து, மாணிக்கத்தாற் செய்த விலைமதித் தற்கரிய திருவுருவம் ஒன்று இருந்திருத்தல்கூடும் எனக் கருத இடமுண்டு. அன்றியும் கதிர்காமத்தைச் சென்று தரிசித்த டொக்டர் டேவி அவர்கள், பெருங் கலகம் நிகழ்ந்தகாலத்திற் கதிர்காமத்திலுள்ள திரு வுருவம் மறைக்கப்பட்டு இன்னும் காட்டிற் கிடக்கின்ற தெனக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இதனாலும் மூல ஸ்தானத்தில் விக்கிரகம் ஒன்றிருந்ததென்பதும், அது மிகவும் விலையுயர்ந்ததென்பதும் பெறப்படும். திருக் கோயிலினுள்ளே தங்கத்தாற் செய்த ஆறுமுகவேலவர்

திருவுருவம் ஒன்று மாசுபடிந்து வஸ்திரத்தால் மறைக்கப்பட்டுக் கிடக்கின்றதெனச் சிலர் கருதுகின்றனர். இஃதுண்மையாயின் சிங்களர் இக்கோயிலின் ஆட்சியைக் கைப்பற்ற முன்னர், தமிழரே சைவமுறைப்படி திருவுருவம் அமைத்து வழிபாடாற்றி வந்தனர் என்பதும், இத் திருவுருவத்திற்கு வழிபாடாற்றும் முறை சிங்களவருக்குத் தெரியாமற் போகவே, இக் கோயிலின் வாயிலை மறைத்துத் திரைச்சீலை யிட்டனர் என்பதும் வலியுறும். ஆறுமுகவேலவர் வள்ளி தெய்வயானையுடன் அடியார்க் கருள்புரியும் காட்சியே திரைச்சீலையில் ஓவியமாகத் தீட்டப்பெற்றுள்ளது. இத் திரைச்சீலை எக்காரணத்தை முன்னிட்டும் ஒரு பொழுதும் அகற்றப்படுவதில்லை.

## கோயில் திருவிழாக்கள்

கதிர்காமக் கோயிலில் வருடந்தோறும் நான்கு திருவிழாக்கள் நடைபெறும். முதற்றிருவிழா சித்திரை வருடப்பிறப்புத் தினத்தன்று நடைபெறும். இரண்டாவதாக ஆனி அல்லது ஆடியில் பந்தற்கால் நடும் திருவிழா நடைபெறும். அஃதாவது ஆடி அல்லது ஆவணியில் நடைபெறவிருக்கும் திருவிழாவுக்கு ஒரு மாதத்துக்கு முன்னரே கந்தசுவாமியார் வள்ளிநாய்ச்சியாரை மணமுடித்தற்கு வேண்டிய பந்தல் அமைப்பதற்குக் கன்னிக்கால் நடும் திருவிழா நடைபெறும். மூன்றாவதாக ஆடி அல்லது ஆவணியில் 15 அல்லது 16 நாட்களுக்குத் திருவிழாவும் தீர்த்தோற்சவமும் நடைபெறும். நான்காவதாக, கார்த்திகை மாதத்தில் திருக்கார்த்திகை விளக்கீட்டுத் திருவிழா நடைபெறும்.

**திணியா னமனே சிலைமீ துனதாள்**
**அணியா ரரவிந் தம்அரும் புமதோ**
**பணியா வெனவள் ளிபதம் பணியுந்**
**தணியா அதிமோ கதயா பரனே.**

# கதிரையாத்திரை

முற்காலத்திற் சைவர்கள் தாம் நினைத்தபொழுதெல்லாம் கதிர்காம யாத்திரை செய்யவில்லை. கதிரையாண்டவன் (கனவிற் ரோன்றி) வருமாறு விடை கொடுத்தாலன்றிப் பக்தர்கள் கதிர்காம யாத்திரை செய்யத் துணியார்கள். அங்ஙனம் உத்தரவின்றிச் சென்றாற் பல இன்னல்களை அநுபவிக்க நேரிடும் என்பது அவர்களுடைய நம்பிக்கை. அன்றியும் பழங்காலத்திற் பிரயாண வசதிகளும் மிகக் குறைவு. கதிர்காம யாத்திரை செய்வது இக்காலத்தில் அவ்வளவு துன்பமானதொன்றன்று. கதிர்காம க்ஷேத்திரம்வரை மோட்டார்வண்டியிற் செல்லக்கூடியதாகப் பாதை இப்பொழுது திருத்தப்பட்டிருக்கிறது. அன்றியும் திருவிழாக் காலங்களில் அன்பர்கள் ஆங்காங்கு மடங்கள் அமைத்து யாத்திரை செய்பவர்கட்கு வேண்டிய வசதிகளை அளிக்கின்றார்கள். கொழும்பு மருதானையில் ஒரு மடமும், காலியிற் சிவன்கோயிலுக்கருகில் ஒரு மடமும், மாத்துறையில் ஒரு மடமும் யாத்திரிகருக்கு வேண்டிய வசதியளிக்கின்றன. கொழும்பிலிருந்து மாத்துறைவரை புகையிரதத்திற் பிரயாணஞ் செய்யலாம்; பின்னர் மாத்துறை மடத்தில் தங்கி அங்கிருந்து பஸ்வண்டி மூலம், திசமஹாராமவரை செல்லலாம்; திசமஹாராமவிலிருந்து கதிர்காமத்துக்கு ஏறக்குறையப் பத்துப்பதினொரு மைல் தூரம் இருக்கும். இதற்கு மாட்டுவண்டியிற் செல்லலாம்; ஆனாற் பெரும்பாலோர் திசமஹாராமவிலிருந்து கால்நடையாகவே கூட்டங் கூட்டமாகச் சேர்ந்து ஆடிப்பாடிக் கொண்டு செல்வர். எல்லாரும் கடவுளின் குழந்


தைகள் என்ற எண்ணமே தாண்டவமாடுகின்றது பிறர் துன்பத்தைத் தன் துன்பமாக ஒவ்வொருவனும் பாவிக்க ஆரம்பித்துவிடுகிறுன். எங்கே பார்த்தாலும் அரோஹரா எனும் சத்தமே வானத்தையும் பிளந்து கொண்டு செல்லும். எந்தப் பொருளையும், அரோஹரா மயமாகப் பாவிப்பார்கள் பக்தர்கள். அரோஹரா எனும் வார்த்தையைச் சொல்லியறியாதவர்களும் சொல்வதற்கு ஆரம்பத்தில் மனங்கூசியவர்களும், நடந்து செல்லச் செல்ல, 'அரோஹரா' எனும் நாமத்தை அடிக்கடி உச்சரிக்கத் தொடங்கி, தம் மனத்தில் எழும் அச்சங் கலந்த பக்தியை வெளிக் காட்டுவார்கள்.

கதிர்காமக்ஷேத்திரத்தை அடைவதற்கு முன்னர் மாணிக்க கங்கையெனும் ஆற்றைக் கடத்தல்வேண்டும். யாத்திரை செய்து களைத்துவந்த அடியார்கள் தங்கள் தாகந்தீர இக்கங்கையில் அள்ளி அள்ளிக் குடிக்கலாம். மாணிக்க கங்கையில் மூழ்கித் தம்மைச் சுத்தஞ்செய்த பின்னரே கதிர்காமக்ஷேத்திரத்தினுள் யாத்திரிகர் கால்வைக்க வேண்டுமென்ற முறையிற்போலும் இக் கங்கை அமைந்துளது.

மாணிக்க கங்கையின் சிறப்பு யாதெனின், மாசு படிந்த உள்ளத்தைக் கழுவி மாணிக்கமயமாக்கி இறைவன் திருவடி படிதற்குரிய தூய்மையுடையதாக்கி விடுகின்றது. எனவே இதற்கு மாணிக்க கங்கையெனும் பெயர் மிகப் பொருத்தமானதே. மேலும் இக் கங்கையினை ஒரு பிறவிக்கடலாகவும் வேருெருவகையிற் கொள்ளலாம். இதனை நீந்திச் சென்ருர் இறைவன் திருவடியைச் சேர்ந்தாராகக் கருதப்படுவர். கதிர்காமத்தில் மாணிக்க கங்கை இல்லாதிருக்குமாளுல் அங்கே செல்லும் பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் நிலைமை




திஸ்ஸமஹாராமாவிலிருந்து பக்தர்கள்
கதிர்காமத்துக்கு நடந்து செல்லுதல்



பக்தர்கள் வணங்கும் காட்சி



பக்தர்கள் திருமலையேறுதல்



கதிரைமலை வழிபாடு

என்னுரும் என நினைக்கும்பொழுது, கதிர்காமப் பெருமானின் திருவருட்டிறனை நினைந்து நினைந்து உருக நேரிடும். இந்நதியைக் கடந்தால், எல்லாரும் ஒரு தாய் வயிற்றிற் பிறந்த பிள்ளைகள் என்ற எண்ண மும் 'உற்ருரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன் பேர் வேண்டேன்' என்ற ஞானமும் உதயமாகின்றன. கடவுட்கொள்கையில் நம்பிக்கையில்லாத கசடனுக்கும் 'தெய்வமென்பதோர் சித்தமுண்டாகி' அவன் கண்ணீர் விடத் தொடங்கிவிடுகிருன். தன்னை யறியாமலே "முருகா, முருகா திருமால் மருகா" எனப் புலம்பத் தொடங்கிவிடுகிருன்.

மாணிக்க கங்கையைக் கடந்து கதிர்காமநாதன் சந்நிதியையடைந்த அடியார்கள் சாதி, குலம், பதவி எனும் தடுமாற்றங் கடந்தவர்களாய், பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் என்னும் பேருண்மையைக் கடைப் பிடித்தவர்களாய் ஒருங்குநின்று கதிர்காமக்கடவுளை வழிபடுகிருர்கள். அரசனும், ஆண்டியும்; நீதிபதியும், வேலைக்காரனும்; உயர்ந்த சாதியிற் பிறந்தவனும், தாழ்ந்த சாதியிற் பிறந்தவனும்; பார்ப்பானும், பறையனும் எவ்வித வெறுப்பேனும், வேறுபாடேனும் காட்டாது சகோதரபான்மையுடன் வழிபடுவதை இன்றுங் காணலாம்.

**'ஆடுவதும் பாடுவதும் ஆனந்த மாகநின்னைத்**
**தேடுவதும் நின்னடியார் செய்கை பராபரமே'**

எனத் தாயுமான அடிகள் உணர்த்திய உண்மை யினைத் திருக்கதிர்காமத்திற் கூடும் அடியார்களிடத்துக் காணலாம். இந்தியாவில் மகாத்மா காந்தியடிகளின் முயற்சியாலும் திருவாங்கூர் மகாராசாவின் கட்டளை யாலும் சைவக் கோயில்களினுள்ளே தீண்டாச் சாதியார் சென்று வழிபட இப்பொழுதுதான்

ஏற்பாடு செய்யப்பட்டுவருகின்றது. ஆனால், எவ்விதமான கட்டுப்பாடு மின்றி இறைவனை வழிபடலாம் எனும் வழக்கம் திருக்கதிர்காமத்தில் நெடுங்காலமாக இருந்துவருவதை நோக்குமிடத்து இத்திருக்கோயிலின் சிறப்புப் புலனாகின்றதல்லவா ?

## செல்லக்கதிர்காமம்

சூகனடியார், திரைமறைவிலிருக்கும் கதிர்காம நாதனை வழிபட்டபின்னர், அத்தலத்திலிருந்து மூன்று மைல் தூரத்திலிருக்கும் செல்லக்கதிர்காமத்திற்குச் செல்வர். இவ்விடத்திலும் மாணிக்க கங்கையானவள் தன் இருகரங்களினாலும் மணிகளையும் தரளங்களையும் வீசிக்கொண்டே செல்கின்றாள். செல்லக்கதிர்காமத்தைப் பழைய கதிர்காமம் எனக் கூறுவாருமுளர். மாணிக்க கங்கையில் தீர்த்தமாடி, கரையில் இருக்கும் மாணிக்கப்பிள்ளையாரை வணங்கி அவரிடம் விடை பெற்றபின்னரே, சுவாமிமலை யெனப்படும் திருமலை யேறி வழிபாடு செய்வதற்கு அடியார்கள் ஆரம்பிப்பார்கள். செல்லக்கதிர்காமத்திலுள்ள மாணிக்கப் பிள்ளையாருக்கு பாபாக்களே பூசை செய்து வருகிறார்கள்.

## கதிரைமலை

கதிர்காம மலைநாத னுமெந்தை தனையேத்து
கடவுளர்கண் முனிவர் சித்தர்
கந்தருவர் கின்னரர்கள் கருடர்கிம் புருடரொடு
ககனர்வரு முரகர் முதலாம்
பதினெண் கணத்தடிய வர்க்கெலாந் திருவருள்ப
ரிந்துபா லித்து நாளும்
பரிவினிற் கதிரைமலை தவிராது வைகினான்
பரமசுக முலகு பயில

முதிர்விநா யகர்தமலை வீரவா கமருமலை
மொழிதேவ சேனு மலை
முத்துவள்ளி மலையஞ்சு காமமலை செந்தமிழின்
முனிமலைக ளயலின் முடுகுஞ்
சதிரிலுன் றிருவடி யடைந்திடத் தகுவதோ
சாந்தநா யகி சமேத
சந்த்ரமௌ லீசனே யெந்தொழில் விலாசனே
சந்த்ரபுர தலவா சனே.
(சந்திர மௌலீசர் சதகமென்னும் ஈழமண்டல சதகம்)

அருணகிரிநாதரும் தாம் பாடிய திருப்புகழில்,

'கதிரகாம வெற்பி லுறைவோனே
கனகமேரு வொத்த புயவீரா' என்றும்,

'ஈழத்தினிற் கதிர்கா மக்கிரிப் பெருமாளே'
என்றும் கதிர்வேலவன் விரும்பி யுறையுமிடம் கதிரைமலையெனக் குறிப்பிட்டுள்ளார்.

குன்றுதோறும் ஆடும் குமரவேளை அவன் விரும்பி வீற்றிருக்கும் கதிரைக்குன்றின்மேற் கண்டு மகிழ்தற்குச் செல்லும் அடியார்கள் சிறிது கஷ்டப்பட்டே மலையேறவேண்டும். பழநி, திருத்தணி முதலிய இடங்களிற்போல இம் மலையினுச்சியை யடைதற்குப் படிகள் கட்டப்படவில்லை. முதலில் பிள்ளையார்மலை வரை பாதை அவ்வளவு கஷ்டமாக இல்லை. பிள்ளையார் மலைக்கேறி, அவரை வணங்கி விடைபெற்றுக் கொண்டு கதிரைமலைக்கேறவேண்டும். பிள்ளையார் மலையிலிருந்து பாதை சிறிது செங்குத்தாகவே யிருக்கின்றது. ஆகையால், அடியார்கள் முருகன் நாமத்தை உச்சரித்துக்கொண்டு பயபக்தியுடன் ஏறினல், கஷ்டம் தெரியாது. மலையுச்சிக்கேறிவிட்டால் இயற்கை யெழில்மூலம் முருகன் அழகைக் கண்டு மகிழலாம்.

இவ்விளமை யெழிலினை முருகன் அருள்கொண் டறியார் அறியுந்தரமோ ?

திருமலைக்கேறுதற்கும் முருகனுடைய உத்தரவு வேண்டுமெனச் சொல்வதுண்டு. சிலவருடங்களுக்கு முன்புகூடச் சிலர் இம்மலைக்குச் செல்லமுடியாமல் அலைந்து திரிந்து மறுபடியும் மாணிக்க கங்கைக்கருகே வந்துசேர்ந்ததை யானறிவேன்.

இருபதாம் நூற்ருண்டிலும் கண்கண்ட தெய்வ மாகவே கலியுகவரதன் விளங்குகின்ருன் என்பதற்கு இன்னும் பல சான்றுகள் உண்டு. கதிர்காமத்தில் சுவாமி சந்நிதியில் நடைபெறும் அற்புதங்கள் அளப்பில. பக்தியும் நம்பிக்கையு முடையவர்களுடன் கொண்டாடி விளையாடுவதே அந்தக் கள்வனின் செயல்.

**‘பள்ளம் படுநீர் எனவே பரிவின்**
**வெள்ளம் படுநல் வழிவே லவனே’**

என அருணகிரிநாதரும் போற்றுகின்ருர்.

முருகன் செஞ்சொல் அடியார்கள் எளிமைக் காரன்; அவர்கள் வாரக்காரன்; அஞ்சலி செய் வோர்கள் நேயக்காரன்; ஏழு பிறவிக்கடலை ஏறவிடு நற்கருணை ஓடக்காரன்; எங்கள் மனத்திலுள்ள திரைமறைவை நீக்கிக்கொள்ளத் தெரிந்தால் என்றும் இளையோனுகிய முருகனை என்றுங் கண்டுமகிழலாம். அவனுடன் உரையாடலாம்; ஆடலாம்; என்றும் இன்புற்றிருக்கலாம்.

**எந்தா யுமெனக் கருள்தந் தையும்நீ**
**சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்**
**கந்தா கதிர்வே லவனே உமையாள்**
**மைந்தா குமரா மறைநா யகனே.**

## கோயிலைத் தரிசித்தோர்

பண்டைக்காலந் தொட்டுப் பல புலவர்களும் அறிஞர்களும் துறவிகளும் இத்தலத்தைத் தரிசித்திருத்தல்வேண்டும். யாப்பருங்கலவிருத்தி மேற்கோட் செய்யுளைப் பாடிய புலவரும் இதனைத் தரிசித்திருத்தல் கூடுமெனக் கருத இடமுண்டு. இத்தலத்தைப் பற்றிய பழஞ் செய்யுளொன்று பிரசங்கமாலையின்கணுள்ளது :

எட்டைய புரநாக லாபுரம் மணியாச்சி
யிரசக்க னூர்கோட் டையூர்
ஏழா யிரம்பண்ணை சந்தையூ ரூற்றுமலை
யெழுமலை மருங்கை நல்லூர்
இலகுமன் னூர்கோட்டை பாவாலி சிவகிரி
யிலக்கைய னூர்முல் லையூ
ரிடையகோட் டைப்பதி நிலைக்கோட்டை தேவாரம்
ராமகிரி கன்னி வாடி
தொட்டப்ப னூர்கம்பை காசைவா ராப்பூரு
தோகைமலை யழகா புரி
சுரண்டைதலை வன்கோட்டை பழனியாய்க் குடிசமுத்
தூர்விருப் பாச்சி படமாத்
தூர்கடம் பூர்பெத்த ணன்னூற்று நகர்குளத்
தூர்காம னூர் சாப்பிடூர்
தும்பிச்சி நாய்க்கனூர் நத்தமூர்க் காடுசேற்
றூர்வெள்ளி குன்ற மலைய
பட்டிவட கரையமைய நாயக்க னூர்கொல்ல
பட்டிசக் கந்தி கோலார்
பட்டிமத வானையூர் மேன்மாந்தை ரோசலைப்
பட்டிவீ ரமலை சிங்கம்
பட்டிநெற் கட்டுசெவல் நற்பெரிய குளமாத்தி
பட்டிகுரு விகுள மதுவார்
பட்டிகரி சற்பட்டி நடுவுக் குறிச்சிகோம்
பைகவுண் டன்பட்டி யூர்

கட்டபொம் மன்னூர்கு மரவாடி கவினிளசை
கடுவூர்நல் லுதயப்ப னூர்
கனகொலங் கொண்டாறெ டெழுபத்தி ரண்டுடன்
கருதுமெண் ணேழ்தேச முங்
கவியருமை யறிபவர்க ளுண்டதினு நின்போற்
கவித்திறமி யாவ ரறிவார்
கனமேவு புனல்சூழும் வயல்நீடு மலைமேவு
கதிர்காம வடிவேல னே.

—(செந்தமிழில் வெளிவந்த செய்யுள்).

பதின்மூன்றும் நூற்றுண்டிற் புகழேந்திப் புலவர் யாழ்ப்பாண அரசனின் உதவியோடு இக்கோயிலைத் தரிசித்துள்ளார். இவர் கதிர்காமத்து வேலர் முன் பாம்பை மயில்விடப் பாடியதாக ஒரு செய்யுள் தமிழ் நாவலர் சரிதையிலுண்டு:

"தாயரவை முன்வருத்துஞ் சந்த்ரோ தயந்தனக்குன்
வாயரவை விட்டுவிட மாட்டாயோ—தீயரவைச்
சீறு மயிற்பெருமா டென்கதிர்கா மப்பெருமாள்
ஏறு மயிற்பெருமா ளே!"

14-ம் நூற்றுண்டின் மத்தியிலே வாழ்ந்தவரெனக் கருதப்படும் அருணகிரிநாதரும் இத்தலத்தைத் தரிசித்து இருபத்தைந்திற்கு மேற்பட்ட திருப்புகழ் மாலைகள் சாற்றியுள்ளார். கதிர்காமம் எனுந் தலத்திற்கு கதிருகாம, கதிர்காம, கதிரகாம, கதிரை எனும் பல மரூஉப்பெயர்கள் வழங்கின என்பது அருணகிரிநாதர் திருவாக்கால் அறியக்கிடக்கின்றது. இன்னும் மாணிக்க கங்கைக்கு 'வடவை ஆறு' எனும் பெயர் உண்டென்பது,

"கலகவாரி போல்மோதி வடவைஆறு சூழ்சீத
கதிரகாம மூதூரில் இளையோனே".

எனும் திருப்புகழடியால் அறியலாம். மாணிக்க கங்கையெனும் கன்னிகை இளமுருகன் எழிலைக் கண்டதும் தன் கையிற் கொணர்ந்த மணியையும் முத்தையும் இருமருங்கும் அள்ளிவீசத் தொடங்கினாள் என்கின்றார் அருணகிரிநாதர் :

" மணிதரளம் வீசி அணியருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள்காண் ".

மேலும் கதிர்காமத்தில் உறைபவனது வடிவம் கனகமாணிக்கம் என்று அருணகிரிநாதர் கூறுகின்றார் :

" கனகமா ணிக்க வடிவனே மிக்க
கதிரகா மத்தில் உறைவோனே ".

அருணகிரிநாதர் கதிர்காம தலத்தைப் பற்றிக் கூறியிருக்கும் சரித்திர உண்மைகளை நோக்கினால் அவர் கதிர்காமத்தைத் தரிசித்திருத்தல் கூடும் என்ற கொள்கை வலியுறுவதைக் காணலாம்.

" வனமுறை வேட னருளிய பூஜை
மகிழ்கதிர் காம முடையோனே ".

"கதிர்விடு வேலைக் கதிரினில் மேவிக்
கலைபல தேர்முத் தமிழ்நாடா ".

கதிர்காமநாதனைப் பக்தியுடன் சென்று தரிசித்த அடியார் கூட்டத்தை விட, வேறொரு கூட்டத்தினரும் அங்கே செல்ல எத்தனித்தனர். 16-ம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர், கதிரைமலையிலுள்ள கோயிலிற் பணமிருக்குமெனக் கருதி, அதனைச் சூறையாடும் கருத்துடன் சென்ற செய்தி, 1640-ம் ஆண்டளவில் இலங்கைக்குவந்து சிலகாலமிருந்த ரிபேயிரோ எனும் போர்த்துக்கேயன் எழுதிய இலங்கைச் சரித்திரத்திற் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதனையும்

மொழிபெயர்த்து இங்கே எடுத்துக்காட்ட விரும்புகின்றோம் :

"பழைய யாலா அரசிருந்த விடத்திற்குப் பன்னிரண்டு மைல் தூரத்தில் உள்நாட்டிற், புறச்சமயிகளாற் போற்றப்படும் கோயிலொன்றுளது. பலவாண்டுகளாகக் கொடுக்கப்பட்ட காணிக்கைகளாகிய தங்கம், ஆபரணம், விலையுயர்ந்த கற்கள், முதலியனவற்றைப் பாதுகாக்க, இங்கே ஆயுதம் பூண்ட ஐந்நூறுபேர்கொண்ட படையொன்று காவல் புரிந்து வந்தது. இவற்றைக் கைப்பற்ற வேண்டுமென்னும் பேராசையால் உந்தப்பட்டுப் பலமுறை இவற்றைப் பற்றி விசாரித்தோம். 1642-ம் ஆண்டின் தொடக்கத்தில், எங்கள் எல்லோராலும் நன்கு மதிக்கப்பட்டவரும் அவ்வூராரின் மொழி வழக்கம் முதலியவற்றை நன்குணர்ந்தவருமாகிய காஸ்பார் பிகூராடோகேப் என்பவரின் தலைமையின்கீழ்ப் பெரும்பாலும் கிறீஸ்தவர்களாயுள்ள 2000 காலாட் படையும் 150 போர்த்துக்கேயருமாகக் கோயிலை நாடிச் சென்றோம். குறித்த ஆலயம் இருக்குமிடத்திற்கு அண்மையில் வந்து அங்குள்ளாரொருவனை விசாரித்தபொழுது, ஆலயம் இருக்குமிடம் தனக்குத் தெரியுமெனவும், மிக அண்மையி லுண்டெனவுங் கூறினான். அவனே எங்கட்கு வழிகாட்டியாகி அப்பகுதியிற் காணப்பட்ட தனிக் காடடர்ந்த மலைவழியாகக் கூட்டிச் சென்றபொழுது சுற்றி யலைந்து முன்சென்ற வழியையே பலமுறை திரும்பிக் கடக்க நேரிட்டது. ஆலயம் மலையினுச்சியில் உள்ளதென்பது உண்மையாயினும், அதன்கண் எத்தகைய மந்திரசக்தி இருக்கின்றதோ அறிகிலேன். எங்கட்கு வழிகாட்டிய ஐவருள் முதன் மூவர் பைத்தியம் பிடித்தவர்போல் நடித்தமையால், எங்களை

ஏமாற்றுகிறுரெனக் கருதி அவர்களைக் கொல்ல நேர்ந்தது. மற்றிருவரும் அவ்வண்ணமே செய்தமையால் 'கதிரகோ' என்றழைக்கப்படும் அவ்வாலயத்தைக் காணுமலும், எண்ணிய செயலை நிறைவேற்ற முடியாமலும் வந்தவழியே திரும்பவேண்டிநேரிட்டது."

## முத்துலிங்கசுவாமி—கலியாண மடம்

கி. பி. 1600-ம் ஆண்டளவில் இந்தியாவிலிருந்து வந்த அடியார்கள் பலரைக் கண்டியரசனுக்கு உதவி புரிய வந்த படையென ஐயுற்ற போர்த்துக்கேயர், யாழ்ப்பாணத்திலிருந்த அரசனுகிய எதிர்மன்னசிங்க பரராசசேகரன்மூலம், முந்நூறுபேர்களைக் கதிர்காமத்துக்குச் செல்லவிடாது தடுத்துத் திருப்பியனுப்பினர். அந்நாட்களில் ஒரு சிலரே கதிர்காம யாத்திரை செய்யத் துணிந்தனர். அங்ஙனம் துணிந்தவர்களுள் காஷ்மீரத்திலிருந்து வந்த கலியாணகிரி அல்லது கலியாணநாதர் எனும் அந்தணருமொருவர். இவர் வந்ததற்கு ஒரு காரணமுண்டு. கதிர்காமத்துக்குவந்த கந்தசுவாமியார் தினைப்புனத்தில் வள்ளியை மணஞ்செய்ததும், அவளுடன் திரும்பித் தமது சொந்த ஊருக்கு வராமல் மனைவியினுடைய வீட்டிலேயே தங்கிவிட்டார். இதனுல், 'அடியார்களாகிய எங்கட்கு இது பெருங் குறைவு. அன்றியும் தெய்வானையம்மையாரை இந்தியாவில் விட்டு இவர் இங்கே உறைகின்றுரே என்று மனம் பதைபதைத்துக் கந்தசுவாமியாரை மட்டும் தமது ஊருக்குக் கூட்டிச் செல்லவேண்டு' மென்ற ஆவலுடன் விரைந்து சென்றுர். சென்று கந்தசுவாமியாரைத் தரிசிக்கும் கருத்துடன் பன்னீராண்டு கடுந்தவம் செய்தபொழுது ஒரு வேட்டுவச் சிறுவனும் சிறுமியும் இவ்வடியாருக்குத் தொண்டாற்றி வந்தார்கள். தவத்தாற் களைத்து

ஞானியார் ஒருநாள் கண் அயர்ந்துவிட, வேட்டுவச் சிறுவன் இவரைத் தட்டி விழிக்கச் செய்தான். பல வருடங்கட்குப் பின்பு வந்துற்ற நித்திரைக்குப் பங்கம் விளைந்ததால் ஞானியார் சீற்றங்கொண்டு சிறுவனை ஏச, அவனும் ஏதோ சாட்டுச் சொல்லி முணு முணுத்துக்கொண்டு ஓட ஆரம்பித்தான். சிறுமியும் பின் தொடர்ந்தாள். கலியாணகிரியும் அவர்களைப் பிடிக்கும் நோக்குடன் விரைந்து பின்தொடர, அச் சிறுவர் இருவரும் மாணிக்க கங்கையின் ஆற்றிடைக் குறையில் மறைந்து கந்தசுவாமியும் வள்ளிநாயகியு மாகக் காட்சியளித்தனர். இக்காட்சியைக் கண்ட அடி யார் உரோமஞ் சிலிர்ப்ப உரைதடுமாறி அடியற்ற மரம்போல் எட்டுறுப்புந் தோய நிலத்தில் வீழ்ந்து தொழுதார். தொழுத அடியார்க்கு ஆறுதலை யளிக்க விரும்பிய ஆறுமுகவேலவர், "உன் குறை யாது?" என வினவ, அடியாரும் தமது கருத்தை வெளியிட் டார். இதனைக் கேள்வியுற்ற வள்ளிநாயகியார் தமது மணாளனைப் பிரித்துக் கூட்டிச் செல்லல் தகுதியன் றெனக் கூறி மாங்கலியப்பிச்சை யளிக்குமாறு பரி வுடன்கேட்டார். ஞானியாரும் அதற்கு இயைந்துஅங்கு தானே தமது வாணாளை இறைவன் பணியிற் கழிக்கத் தீர்மானித்தார். கந்தசுவாமியாரைக் கூட்டிச் செல்ல வந்த ஞானியார் கதிர்காமநாதனுக்கே அடிமையாகி, அவரை விட்டுப் பிரிய மனமின்றி, கதிர்காமத்திலேயே இருக்கலானார். அன்றியும், கோயிலில் அமைத்து அடி யார்கள் வணங்கும் பொருட்டுப் பொன் தகட்டில் எந்திரமொன்று வரைந்து முருகவேளுக்குரிய மந்திர வெழுத்துக்களை அதன்கண் அமைத்து உருவேற்றிப் பெட்டியொன்றில் வைத்தார். இப் பெட்டியே விழாக் காலங்களில் யானைமேலேற்றி உலாப்போவது. இங்ஙனம் முருகன் அருள் பெற்ற அடியாரே அக்

காலத்திருந்த அரசனின் உதவியுடன் கோயிலைத் திருத்தியமைத்தார். இவர் ஒடுக்கமடைந்தபொழுது இவரது திருமேனி முத்துமயமான இலிங்கவடிவா யிற்றுதலின் முத்துலிங்கசுவாமியென இப்பொழுது சனங்கள் வணங்குகின்றனர். இவருடைய சமாதி வள்ளியம்மன் கோயிலுக்குப் பக்கத்தில் மாணிக்க கங்கைக்கருகில் உள்ளது. இவர் இருந்த இடம் கலியாணமடம் என வழங்கப்படுகின்றது. இது தெய்வயானையம்மன் கோயிலுக்கு நேரேயுள்ள மண்ட பத்திலுள்ளது.

முதலியார் இராசநாயகம் அவர்கள் இச் சரித்தி த்ரதைச் சிறிது மாறுபடக் கூறுகின்றுரெனினும், அம் மாறுபாடு மிகப் பொருத்தமுடையதாகக் காணப்படு கின்றதாதலின் அதனையும் குறிப்பிட விரும்புகின்றும்:

"கலியாணநாதர் கந்தசுவாமியைப் பன்னிரண்டு வருடம் பூசித்தும் காணமுடியாமையாற் பொற்றக டொன்றில் எந்திரம் கீறி உருவேற்றிப் பெட்டியில் அடைத்து முருகனை இந்தியாவுக்குக் கொண்டுசெல்ல ஆயத்தஞ் செய்தார். அவர் வெளியே சென்ற சமயம் பார்த்து, அவருக்குப் பணி செய்துகொண்டிருந்த வேட்டுவச் சிறுமி, அப்பெட்டியைத் தூக்கிக்கொண்டு கோயிலுக்கு நேராக ஓடி உள்ளே நுழைந்து மறைந் தனள். கலியாணநாதர் அவளைத் தொடர்ந்து கோயிலுக்குச் சென்றதும், வள்ளிநாய்ச்சியாரும், மணாளனும் காட்சியளித்தனர்." இதற்குப் பின்னர் நிகழ்ந்தனவாக சேர் பொன். அருணுசலம் அவர்கள் குறிப்பிட்டனவும், முதலியார் குறிப்பிட்டனவும் ஒத் திருக்கின்றன.

17-ம் நூற்றுண்டில் இலங்கையில் இருபதாண்டு வரை சிறைப்பட்டிருந்த **ரொபேட் நொக்ஸ்** எனும்

ஆங்கிலேயன் 1681-ல் எழுதிய 'இலங்கைச் சரித்திரத் தொடர்பு' எனும் நூலிற் கதிர்காமத்தைப் பற்றிய குறிப்புக்கள் சிலவுள :

"நான் கேள்விப்பட்டவரையில் இலங்கையின் கிழக்குக்கரை நிலப்பாகம் மலைகளாலும் கப்பல் செல்ல வசதிக்குறைவான கடலாலும் சூழப்பட்டிருக்கின்றது. சுகமுடைய இடமும் அன்று. இதற்குக் காரணம் அயலிலே இருக்கிற பட்டினத்திற் கோயில் கொண்டெழுந்தருளி இருக்கும் 'கொட்டரகன்' எனும் தெய்வத்தின் ஆற்றல் என்பர். உப்பு அள்ளச் செல்லும் யாவரும் இத் தெய்வத்திற்குக் காணிக்கை இட்டே செல்ல வேண்டுமாம். போர்த்துக்கேயருக்கோ அல்லது ஒல்லாந்தருக்கோ, தங்கள் நாட்டு மன்னவனுக்கு எதிராகத் துணைசெய்த இராசத் துரோகிகளாகிய சிங்களர்க்கும் இத் தெய்வத்தின் பெயரும் வல்லமையும் பெருந் திகிலை உண்டாக்கிவிட்டன. அவ்வழியாற் படையெடுத்துப்போக அவர்கள் துணைதானும் செய்யமாட்டார்கள்."

நொக்ஸினுடைய காலத்திற் கண்டிப் பெரஹராவிற் புத்தர் தந்தம் சேர்க்கப்படவில்லையெனவும் அவ்விழாவில் அலுத்நுவரை தெய்யோவும் (விஷ்ணு) கொட்டரகன் தெய்யோவும் (கதிர்காமக்கடவுள்) பத்தினி தெய்யோவும் (கண்ணகி) திருவுலாப் போந்தன எனவும் அவ்வறிஞர் குறிப்பிட்டிருத்தல் இங்கு கவனிக்கத்தக்கது. பத்தினி வழிபாடு, 'கடல் சூழிலங்கைக் கயவாகு வேந்தன்' எனச் சிலப்பதிகாரத்திற் குறிக்கப்படும் முதலாம் கயவாகுமன்னன் காலத்தில், அஃதாவது கி. பி. 145-ம் ஆண்டளவில், இலங்கையிற் பரவத் தொடங்கியது.

## ஜயசிங்ககிரி சுவாமி

கண்டியரசன் சிறைப்பட்ட பின்பு, 1815-ல் கூட்டிய கண்டிச் சமாதான சங்கத்தில் அளித்த வாக்கின்படி, அதிகாரமும் உரிமையுமிழந்து வருந்திய அதிகாரிகளைத் துணையாகக்கொண்டு 1817-ம் ஆண்டு கண்டி மாகாணங்களிற் பெருங் கலகமொன்று ஆரம்பமாயிற்று. இக் கலகம் மிகுந்த வன்கண்மையாகவே அடக்கப்பட்டது. ஊவ மாகாணம் இத்தகைய நிலைமையினின்றும் மீள நெடுங்காலஞ்செல்வதாயிற்று. இக் கலகம் ஒழிந்த காலத்திற்றான் தேசாதிபதி பிரௌண்றிக் அவர்கள், வைத்தியத் தலைவர் டாக்டர் டேவி அவர்களுடன் கதிர்காமத்தைத் தரிசித்தார்கள். அப்பொழுது அவர்களை அங்கே வரவேற்றவர் ஜயசிங்ககிரி சுவாமிகளாகும். இவ்வடியாரைக் குறித்தும், கலியாணமடத்தைக் குறித்தும் 1816 முதல் 1820 வரை படைத் தலைவராயும், வைத்தியராயும் இருந்த டாக்டர் டேவி அவர்கள் 'இலங்கை வரலாறுகள்' எனும் நூலிற் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அப்பகுதியை மொழிபெயர்த்து இங்கே தருகின்றாம் :

"பலராலும் மிகவும் மதிக்கப்படுகின்ற கலியாணமடம் இன்றும் கதிர்காமத்தில் ஒரு புதுமைப் பொருளாகக் காணப்படும். அது, காலற்ற சாய்வுநாற்காலி போல, உயர்ந்த பக்கங்களையும் பின்புறத்தையுமுடையதாய் ஒரு மேடை மீது களிமண்ணாலான பீடமாகும். அது புலித்தோல்களால் மூடப்பட்டுளது. ஆலய வழிபாட்டிற்குரிய கருவிகள் அதன்கண் இருக்கின்றன. அதனருகில் தீ எரிந்துகொண்டிருந்தது. இஃது ஒரு மண்டபத்தின் நடுவில் அமைந்துளது. இம்மண்டபம் இங்குள்ள அந்தணரின் இருப்பிடம். கலியாணமடமானது முதற்குருவாகிய கலியாணநாதருக்கே உரிய

தென்றும், அக் கலியாணநாதர் பத்தி மேலீட்டினால் சாதற் றுயரை யனுபவியாது முத்தியடைந்தபொழுது, அப்பீடத்தைத் தமக்குப் பின் தொண்டாற்ற வரும் குரு பரம்பரைக்குத் தூய்மையான ஆட்சியாகவிட்டுச் சென்றனரென்றும், அவருடைய ஆசாரிய பரம்பரையில் வந்தோர் இப் பீடத்தின்மீது கிடந்தே இவ்வுலக வாழ்வை நீக்கவேண்டுமென்றும் அப் பிராமணர் (ஜயசிங்ககிரி சுவாமி) கூறினார். இங்ஙனம் கூறியவர் தாமும் அவர்களைப்போலவே அதன்மீதிருந்தே உயிர் துறக்கும் பெரும் பேற்றினை மிக அண்மையிற் பெறும் ஆவலுடன் நம்பியிருக்கின்றார். இதனை வைராக்கியத்துடனும், பயபக்தியுடனும் அவர் கூறியது, அவருடைய மொழி வெற்றுரையன்றெனக் காட்டியது.

உருவும் உறுதிமொழியும் உள்ளத்தில் ஆழ்ந்து பதியும் தன்மையவாயிருந்தன. ஓவியம் வரைவான் ஒருவன் தன் தொழிலுக்குச் சிறந்தவரென ஆயிரத்திலொருவராகத் தேர்ந்தெடுக்கும்படியான உயர்ந்த மெல்லிய உருவுடையராகக் காணப்பட்டார். அவருடைய தாடி நீண்டு வெண்மையாயிருந்தது. ஆனால், அவருடைய மெலிந்த உடம்பில் முகத்திற்கு உயிர்ப்பளிக்கும் அக்கண்கள் இன்னும் ஒளிநிறைந்திருந்தன. அவர் வயோதிக தசையின் மெலிவு தோற்றாது, நிமிர்ந்து நின்றார்.

ஜயசிங்ககிரி சுவாமிக்குப் பின் மடாதிபதியாகவிருந்தவர் மங்களகிரி சுவாமியவர்கள். இவ்வடியாரும் 1873-ல் இவ்வுலக வாழ்வை நீத்தனர். இவருக்குப்பின் மடாதிபதியாகவிருந்தவர் பால்குடிபாபா. இவருடைய வரலாற்றை இனி நோக்குவாம்.

## கெசபுரிசுவாமி அல்லது பால்குடிபாபா

ஸ்ரீ கெசபுரி சுவாமியவர்கள் ஏறக்குறைய 125 ஆண்டுகட்குமுன் (1820—38) வட இந்தியாவிற் பிரயாகையிலுள்ள மடத்திலிருந்து இளமைப்பருவத்திற் கதிர்காமத்தை யடைந்தார். முற்கூறிய மடத்திற் சிறிதுகாலம் தங்கியிருந்தார். பின்பு காட்டுக்குச் சென்று பல வருடங்களாகத் தவம்புரிந்துகொண்டிருந்தார். இங்ஙனம் இருக்குங்நாளில், சுரராஜபுரி சுவாமி என்றழைக்கப்படும் ஓர் இளந்துறவி கதிர்காமத்தை அடைந்தார். இவர் திருவுங் கல்வியும் கடவுட் பக்தியும் சிறந்த உருவும் உடையவர். இவர் முதலிற் காஷ்மீர் மகாராசாவின் குதிரைப்படைத் தலைவராயிருந்தவர். செல்வ நிலையாமையினை உணர்ந்து துறவறத்தை நாடும் உள்ளமுடைய ராதலின், இவருடைய சுற்றத்தினர் இல்லறம் நடாத்த வேண்டுமென்று இவரை நெருக்க, இவர் இயையாமை கண்டு விட்டுச்செல்ல நேரிட்டது. மகாராசா அவர்கட்கும் இதனை அறிவித்து அவர் வாயிலாக இல்லற வாழ்விற் புகும்படி நெருக்கியபொழுது, பெரும்பிறவிப் பௌவத் தடந்திரையால் பற்றொன்றி எற்றுண்பாரொருவன், கனியைநேர் துவர்வாயார் எனுங் காலாற் கலக்குண்டு, காமவான் சுறவின் வாய்ப்பட்டு, உய்யுமாறறியாது மயங்குதலை யானும் பெறுவேன் எனக் கருதி, வீட்டினின்றும் புறப்பட்டு, இரந்துண்டு இராமேஸ்வரத்தையடைந்தார். இத்தலத்தில் தங்கியிருக்கும்போது ஸ்ரீபாதத்துக்குச் செல்லும்படி கடவுள் ஆணை கிடைத்தது. உடனே அவர் புறப்பட்டு இலங்கைக்கு வந்து சமனொளிமலையினை அடைந்தார். அவ்விடத்தில் சிலநாள் தங்கியதும், கதிர்காமத்திற்குப் போகும்படியும், அங்கே மலைச்சாரலிற் கடுந்தவம் புரி

யும் அடியார் ஒருவரைக் காண்பாரென்றும் திருவருள் ஆணையுண்டாயிற்று. சுரராஜபுரி சுவாமிகள் அங்ஙனமே செய்து மலையிலிருந்த தவத்தினரைக் கோயிலுக்குக் கொணர்ந்தார். சிலகாலம் முருகப்பெருமானின் கட்டளைப்படி அவர் சோறுண்டனரேனும், தமது உடல் நிலைக்கு ஒவ்வாமை கண்டு, பால்மாத்திரமே உணவாக உட்கொண்டார். இதனால் இவரை மடத்திலுள்ளாரும் பிறரும் 'பால்குடிபாபா' எனவழைத்தனர். இவரொடு சுரராஜபுரி சுவாமியும் மடத்தில் தங்கினர். இங்ஙனமிருந்த பால்குடிபாபா 1898-ம் ஆண்டு ஆடிமாதம் கொழும்புநகரத்தில் உயிர் நீத்தார். இவருடைய சீடர்கள் உடம்பினைக் கதிர்காமத்திற் கெடுத்துச் சென்று சமாதிசெய்து ஒரு கோயிலுங் கட்டியுள்ளார்கள். சுரராஜபுரி சுவாமிகளும் அவ்வாண்டிற்றனே கார்த்திகை மாதம் இறைவன் திருவடிநீழலையடைந்தார்.

## பாலசுந்தரி

கண்டியில் அரசாண்ட கடைசி யரசனாகிய ஸ்ரீ விக்கிரமராசசிங்கன் காலத்தில் இந்தியாவின் வடபாகத்திலிருந்த அரசன் ஒருவன் மக்கட்பேறின்மையால் இத்தலத்தைத் தரிசித்துத் தனக்குப் பிள்ளைப் பேறுண்டாகுமாயின், மூத்தபிள்ளையைக் கதிர்காம வேலருக்குத் தொண்டாற்ற விடுவேனென்ற விரதம் பூண்டு சென்றான். குழந்தை பிறந்ததும் அதன் அழகு காரணமாகப் பாலசுந்தரி எனப் பெயரிட்டுத் தான் முன்பு செய்த விரதத்தை மறந்திருந்தான். அதனை நினைவூட்டற்குரிய உற்பாதங்கள் பல நிகழ்ந்தன. உடனே தனது குமாரத்தியைக் கொணர்ந்து பல தோழியருடன் கதிர்காமத்தில் விட்டுச்சென்றான். அரசிளங்குமாரியும் தெய்வ வழிபாட்டில் ஈடுபட்டுத்

தனது காலத்தை இறைவன் பணியிற் போக்கிவந் தாள். இத்தலத்திற்கு வழிபட வந்த கண்டியரசன் இவளைக் கண்டு காமுற்று அரண்மனைக்கு மீண்டதும் மணஞ்செய்யும் கருத்துடன் பல பரிசில்கள் கொடுத் தனுப்பினன். அவற்றையெல்லாம் இவள் பொருட் படுத்தாது திருப்பியனுப்பினள். இவளை எங்ஙனமா யினும் இசையச் செய்தல் வேண்டுமெனக் கருதிய அரசன் அரண்மனைக்கு இவளை அழைத்துவரும்படி தனது படைவீரரை அனுப்பினன். என் செய்வாள் பாவம்! திக்கற்றவர்க்குத் தெய்வமன்றோ துணை! அடியாரிடத்து அஞ்சுமுகந் தோன்றினல் ஆறுமுகந் தோன்றுதிருக்குமா? இங்ஙனம் கட்டளையிட்ட அர சனையே இவளுடைய பழி சூழ்ந்தமையால் ஆங்கில வரசினர் அவனைச் சிறைப்படுத்தினர். முருகன் திரு வருளால் தப்பிய அரசகுமாரி கிழவிப்பருவம்வரையு மிருந்து தொண்டாற்றி கி. பி. 1876-ம் ஆண்டள வில் இறைவன் திருவடி நீழலை யடைந்தனள். இவ் வரலாற்றை இரண்டாம் இராசசிங்கன் மேலேற்றிக் கூறுவாருமுளர். இவ்வம்மையாருடைய சமாதி கலி யாணமடத்துக்கருகிலுள்ள தோட்டத்தில் பால்குடி பாபாவினுடைய சமாதிக்கருகில் உள்ளது.


## க்ஷேத்திர மகிமை

எல்லாச் சமயத்தவர்க்கும் பொதுவான இறை வனை வழிபடுவதற்குப் பல சமயங்களும் பல படிகளா யமைந்திருப்பதைப்போல, பல சமயத்தவர்களும் வழிபடும் தெய்வத்தன்மை வாய்ந்து விளங்கும் திருத் தலம் திருக்கதிர்காமமாகும்.

இலங்கையிலும் இந்தியாவிலுமிருந்து பௌத்தர் களும் இந்துக்களும் முஸ்லிம்களும் இத் தலத்தைத்

தரிசிக்கின்றனர். கதிர்காமக் கந்தனை வழிபடும் சைவர்கள் காட்டும் அன்பும் ஊக்கமும் அளவிடற்கரியன. புத்தர்பகவான் யோகத்தமர்ந்த திருத்தலங்கள் பதினாறனுட் கதிர்காமமும் ஒன்றாகக் கி. மு. 309-க்கு முன்பே கருதப்பட்டுவந்தது. சிங்களவரசருட் பெரும்பாலார் கதிர்காம தெய்யோவையும் (கதிர்காமக் கடவுள்) பத்தினி தெய்யோவையும் (கண்ணகியம்மன்) வணங்கி வந்தனர் என்பது சரித்திர நூல்களால் நன்கு பெறப்படும். சிங்களரின் தலைநகராயிருந்த கண்டி நகரிலும் இத் தெய்வங்கட்குக் கோயில்கள் அமைத்து வழிபட்டு வந்தனர். கண்டியில் வருடந்தோறும் நடைபெறும் 'பெரஹரா' எனும் விழாவிற் கதிர்காமக் கடவுளுக்கு முதன்மை கொடுக்கப்பட்டு வந்தது.

இனி, ஹிலூர் அலேஹி எனும் முகம்மதிய அடியார் கதிர்காமதலத்தை அடைந்து ஞானம் பெற்றுய்ந்தாரென்பதும் சிலகாலம் அங்கே தொண்டாற்றும் நோக்குடன் தங்கினார் என்பதும் ஐதிகம். இவ் வடியார் சமந்தகூடத்திலும் சிறிதுகாலம் வசித்தார் என்றும் சொல்லப்படுகிறது. கதிர்காமத்தில் முஸ்லிம்பெரியார் ஒருவர் அடங்கிய இடமொன்று வள்ளியம்மன் கோயிலுக்கருகில் இன்றும் காணப்படுகிறது. பண்டைக் காலந்தொட்டுக் கதிர்காமத்தில் நடக்குந் திருவிழாக்களில் முகமதியர் விளக்குப் பந்தம் பிடிக்கும் வழக்கமொன்றுண்டெனச் சைமன் காசிச்செட்டியவர்கள் 'சிலோன் கசெற்றீயர்' எனும் நூலிற் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், இப்பொழுது இவ்வழக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. முருகனுக்குரிய சிறந்த திருத்தலங்களில் முகமதியரின் தொடர்பிருத்தல் ஊன்றி நோக்கத்தக்கது.



செல்லக் கதிர்காமம்



மாணிக்க கங்கை

திருக் கதிர்காமத்தில் முருகப்பெருமான் சிறியதொரு கோயிலில் திரைமறைவிற்றுன் வீற்றிருக்கின்றுர். திரைமறைவில் வீற்றிருந்தும் திசையனைத்தும் ஆள்கின்றுர் எனப் போற்றத்தொடங்கினுர் முருகதாசர் ஒருவர். கதிர்காமத்திற்குச் செல்வோர் கோபுரத்தின் அழகைக் கண்டு களித்தற்கேனும், வீதியின் அமைப்பைக் கண்டு வியத்தற்கேனும், கர்ப்பூரதீபத்தின் ஒளியைக் கண்டு மயங்குதற்கேனும், அங்குள்ள கடை வரிசையைக் கண்டு களித்தற்கேனும் போவதில்லை. அங்ஙனமாயின் வருடந்தோறும் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் செல்வதற்குரிய காரணந்தான் என்னை? கலியுகவரதனுகியகதிர்காமப்பெருமான் வள்ளி நாய்ச்சியாருடன் வீற்றிருந்து கண்கண்ட கடவுளாக அடியார்கட்குத் திருவருள் பொழிதலினுல் என்க. எத்தனையாயிரம் ஆண்டுகள் சென்றபோதிலும், இத்தலத்திலுள்ள திருவருட் சக்தியானது காந்த சக்தி இரும்பை இழுப்பதையொப்ப, அடியார்களைத் தன்னகத்தே இழுத்து உருக்கி விடுகின்றது. இத்தலத்தின் சக்திப் பிரவாகத்தை உணர்தல் கூடுமன்றி, சொற்களால் விரித்தல் எம்போன்ருர்க்கு எளிதன்று. அன்பர்களே! நீங்கள் ஒருமுறை போய்ப் பாருங்கள். மாணிக்கக் கங்கையிற் படிந்தாடுங்கள். பக்தி வெள்ளத்திற் பரவசமுற்று ஆனந்தக்கூத்தாடி 'அரோஹரா' எனும் நாமத்தைச் சொல்லிப்பாருங்கள்.

முருகன் குமரன் குகனென் றுமொழிந்
துருகும் செயல்தந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவும்
குருபுங் கவஎண் குணபஞ் சரனே.

## நிர்வாகம்

கண்டியரசர் காலந் தொடக்கம் கதிர்காமத்திலுள்ள எல்லாக் கோயில்களையும் கலியாண மடத்தி

லுள்ள சுவாமிகளே பரிபாலித்து வந்தார்கள். அங்குள்ள சிங்களக் கப்புராளைமார் சிறிது சிறிதாகக் கோயில்களின் உரிமையைக் கைப்பற்றினர். பிரௌன்றிக் தேசாதிபதியவர்கள் 1819-ல் கதிர்காமத்திற்குச் சென்றபொழுது கப்புராளைமாரைக் கோயிற் பூசையினின்றும் விலக்கி, ஜயசிங்ககிரி சுவாமியையே பரிபாலனஞ் செய்யும்படி கொடுத்தார். வள்ளிநாயகி கோயில்மட்டும் வேட்டுவக் கப்புராளைமாருக்கிருந்தது. ஆனால் நாளடைவில் அக் கப்புராளைமார் கலகம்செய்து பயமுறுத்தி மூலஸ்தான வழிபாட்டிற் பங்குபற்றத் தொடங்கி முற்றையும் பிடித்துக் கொண்டனர். அவர்கள் வள்ளிநாயகியைத் தங்கள் அக்காவென்றும், கந்தவேளை மச்சினு (மைத்துனன்) என்றும் உரிமை பாராட்டுவது வழக்கம். கந்தசுவாமி கோயிலும், வள்ளியம்மன் கோயிலும், பத்தினியம்மன் கோயிலும், பௌத்தமத பரிபாலனச் சட்டத்தின்படி நியமிக்கப்பட்ட பசநாயக்க நிலேமை என்பவரால் பரிபாலிக்கப்பட்டு வருகின்றன. மாணிக்கப்பிள்ளையார் கோயிலும், தெய்வானையம்மன் கோயிலும், முத்துலிங்கசுவாமி கோயிலும், செல்லக்கதிர்காமத்திலுள்ள பிள்ளையார் கோயிலும் பாபாக்களுடைய பரிபாலனத்தின் கீழ் இருக்கின்றன.

கதிர்காமசுவாமி கோயிலுக்கும் வள்ளியம்மன் கோயிலுக்கும் பத்தினி கோயிலுக்கும் பூசை செய்வதற்காக 14 கப்புராளைமார் இருக்கவேண்டும். பன்னிருவர் மாதம் ஒவ்வொருவராகச் சுவாமி சந்நிதியில் பூசை செய்தல்வேண்டும். இவர்கள் தங்களுள் ஒருவரைச் சுவாமிக் கப்புராளையாக நியமிப்பார்கள். திருவிழாக்காலங்களில் இவர்தான் யானைமீது செல்வதற்குத் தகுதியுடையவர். திருவிழாக்கள் நடை

பெறும் சரியான நேரங்களைக் குறிப்பதற்கு ஜோதிடர் ஒருவர் இருக்கிறார். மேளவாத்தியங்களுக்குத் தலைமையாக தவுல்கார முகாந்திரம் ஒருவர் இருக்கிறார். கடவுளுக்கு ஆலாத்தி யெடுப்பதற்கு ஆலாத்திப் பெண்கள் பலர் இருக்கிறார்கள். தீர்த்தோற்சவத்தைக் கவனிக்க இன்னொருவர் இருக்கிறார். இங்ஙனம் முக்கிய வேலைகட்கெல்லாம் ஆட்களுண்டு. இவர்களுக்கு மானியமும் உண்டு.

## நிர்வாக ஊழல்கள்

முருகப்பெருமான் தமிழ்க் கடவுள். இவர் நடமாடும் இடங்கள் தமிழ் நாட்டிலேயே இருக்கின்றன. சைவக் கோயில்களைப் பரிபாலனஞ் செய்வோரும் சைவர்களா யிருப்பதே மிகவும் நல்லது. கதிர்காம ஸ்தலத்தின் நிர்வாகம் சிங்களர் கையிலிருக்கிறது.

இக் கோயிலுக்கு ஆண்டுதோறும் செல்லும் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் பக்தி மேலீட்டினால் அதிக பணத்தை உண்டியலிற் சேர்க்கிறார்கள். இங்ஙனம் சேரும் பெருந்தொகைப் பணத்தைக் கோயிற் கட்டிடம் திருத்துதற்கேனும் அடியார்கள் தங்குவதற்கேற்ற மடங்கள் அமைப்பதற்கேனும் பயன்படுத்தல் வேண்டும். அன்றேல் அடியார்கட்குத் திருவிழாக் காலங்களில் அன்னமிடுதற்காவது அப்பொருளைப் பயன்படுத்த வேண்டும். இக் கோயிலுக்குக் காணிக்கையாகக் கிடைக்கும் தங்க, வெள்ளி ஆபரணங்கள் எங்ஙனம் மறைகின்றன? இவற்றைச் சைவர்கள் சிந்தித்தல் வேண்டும்.

## திருத்த வேலைகள்

சில தண்ணளிச் சீலரின் உதவியால் கதிர்காமத்தில் சில மடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நகரத்

தார் மடம், வைத்தியலிங்கர் மடம், சடையம்மா மடம், தம்பையா மீனும்பாள் மடம், தம்புச்சாமி மடம், பொன்னம்பலசாமி மடம், கங்காணிமார் மடம், தியாகராசபண்டிதர் மடம், டாக்டர் அப்பா சாமி மடம், புவிலிங்கச்செட்டியார் மடம், மருத்துவர் மடம், வண்ணூர் மடம், பழனியாண்டவர் மடம் முதலிய சில மடங்களுண்டு. எனினும் அவை அங்கே செல்கின்ற அடியார் கூட்டத்துக்குப் போதியனவல்ல. அத் தலத்தில் தங்குவதற்கு வேறு வசதிகளும் இல்லை. இத்தகைய சீர்கேட்டால் பல அடியார்கள் பனியிலும் மழையிலும் நனைந்து நோய்வாய்ப்பட்டு வீடு திரும்புகின்றனர். இக்குறையினை நிவிர்த்தி செய்யச் சைவநன்மக்கள் முன்வருதல் வேண்டும்.

கோழிக் கொடியன் அடிபணி யாமற் குவலயத்தே
வாழக் கருதும் மதியிலி காள்உங்கள் வல்வினைநோய்
ஊழிற் பெருவலி உண்ணஒட் டாதுங்கள் அத்தமெல்லாம்
ஆழப் புதைத்துவைத் தால்வரு மோநும் அடிப்பிறகே.

## ஆடி வேல் விழா

குன்ற மெறிந்ததுவுங் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங் கமரரிடர் தீர்த்ததுவு—மின்றென்னைக்
கைவிடா நின்றதுவுங் கற்பொதும்பிற் காத்ததுவு
மெய்விடா வீரன்கை வேல்.

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றுந்
துளைத்தவே லுண்டே துணை.

முருகக் கடவுள் சூரபன்மனைக் கொல்லச் செல்வதற்கு முன்னர் தமது வேலாயுதத்திற்குப் பூசை நிகழ்த்தினூர் எனவும் இதனுல் வேலின் சிறப்பும்

ஆற்றலும் இவ்வளவின எனக் கூறமுடியாதெனவும் கொள்ளப்படும். சில கோயில்களில் வேலாயுதத்தை மூலஸ்தானத்தில் வைத்தே வழிபடுகின்றனர்.

வருடந்தோறும் இந்தியாவிலிருந்தும் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் கதிர்காம வேலரைத் தரிசிக்க அடியார்கள் செல்வது வழக்கம். சில தொண்டர்கள் வட இந்தியாவிலிருந்து கங்கைநீரைக் குடத்தில் முகந்து நிறைத்துச் சுமந்துகொண்டுவந்து அபிஷேகம் செய்வர். கொழும்பு, கண்டி, காலி, இரத்தினபுரி, கம்பளை, வதுளை ஆதியாம் இடங்களிலிருந்து ஏழு வேல் ஆண்டுதோறும் கதிர்காமத்திற்குச் செல்வது வழக்கம். இவற்றுடன் எண்ணிறந்த அடியார் கூட்டம் பின் தொடர்ந்து செல்லும். நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் கதிரேசன்பால் மிக்க பக்தியுடையவர்களாதலால், இவ் வேல் விழாவில் அதிக ஊக்கங்காட்டி வந்தார்கள். வேலுடன் அநேக நாட்கள் நடந்து செல்லவேண்டி நேரிடுவதால், சிலர் இடைவழியில் நிற்க நேர்தலுமுண்டு. சிலகாலங்களில் தொற்று நோய் பரவி வேற்படையை யெடுத்துச் செல்லும் தொண்டர் கூட்டத்துக்குப் பெரிய இடையூற்றினை விளைவித்தது. இவ்வளவு தூரத்திலிருந்து கால்நடையாக வேல் எடுத்துச் செல்லும் வழக்கத்தைச் சுகாதாரம் காரணமாகவே அரசாங்கம் தடைசெய்திருத்தல் வேண்டும்.

இங்ஙனம் தடைசெய்த காலம் கதிர்காமத்திற் பெருங்கலகம் நிகழ்ந்தகாலமாய் (1817 — 1818) அல்லது கொள்ளைநோய் பரவிய காலமாய் (1858) இருத்தல்கூடும். பின்னர்க் குறிப்பிட்ட காலமே மிகப் பொருத்தமுடையதாகப் படுகின்றது. ஏனெனில் கொழும்பிலுள்ள நாட்டுக்கோட்டை நகரத்தார்கள்

1850-ம் ஆண்டில் 'புதுக் கோவில் நகரம்' எனும் பெயருடன் ஒரு சங்கம் நிறுவி 'புதுக்கதிரேசன் கோயில்' எனும் பெயருடன் இரு கோயில்களைக் கட்ட ஆரம்பித்தார்கள். ஒன்றினைக் கொழும்புச் செட்டியார் தெருவிலும், மற்றதை வெள்ளவத்தையிலும் அமைத்தார்கள். இக்கோயிலை உபய கதிர்காமம் என வழங்குவதுமுண்டு.

செட்டியார் தெருவிற் புதுக்கதிரேசன் தோன்றியதும் ஏற்கனவே அத்தெருவில் ஸ்தாபிக்கப்பெற்றிருந்த கோயில் பழைய கதிரேசன் கோயில் எனப் பெயர்பெற்றது. இக் கோயிலதிகாரிகள் பம்பலப்பிட்டியில் கதிரேசன் கோயிலொன்றை நிறுவி, அதற்கு உபய கதிர்காமம் எனப் பெயரிட்டனர். எனவே பழைய கதிரேசன் கோயிலுக்குப் பம்பலப்பிட்டியிலும், புதிய கதிரேசன் கோயிலுக்கு வெள்ளவத்தையிலும் உபய கதிர்காமங்கள் ஏற்படலாயின. ஒரு வருடம் பழைய கதிரேசன் கோயிலில் இருந்து வேல் எடுத்து பம்பலப்பிட்டியிலுள்ள உபய கதிர்காமத்திற் செலுத்தப்படின், அடுத்த வருடம் புதிய கதிரேசன்கோயிலில் இருந்து வேல் எடுத்து வெள்ளவத்தையிலுள்ள உபய கதிர்காமத்திற் செலுத்தும் வழக்கம் ஏற்பட்டது. இம் முறைப்படியே மாறி மாறி வேல் எடுத்துச் செலுத்தப்படும்.

இப்பொழுதும் வேல்தான் இரதத்திலே உலாப் போகிற வழக்கமுண்டு. வேலை வைத்து முருகன் திருவுருவமாக அலங்கரித்து எடுத்துச் செல்வதனால், அடியார்களுக்கு முருகன் திருவுருவமே தோன்றும். ஆனால் உண்மையில் வேல்தான் உள்ளே உண்டு. அதனையே உபய கதிர்காமத்திற்கு எடுத்துச் சென்று செலுத்துகிறார்கள்.

ஆடிவேல் விழாவின் முதல்நாளன்று வேலவர் செட்டியார் தெருவில் இருக்கும் ஆலயத்திலிருந்து காலையில் உபயகதிர்காமத்திற்கு எழுந்தருளுவார். அடுத்தநாள் பக்தர்களுக்குக் கதிர்காமக் காட்சி யருளுவார். ஆயிரக்கணக்கான மக்கள் மதபேதமின்றித் தங்கள் காணிக்கையைச் செலுத்துங் காட்சி எவர் மனதையும் உருகச் செய்யும். மூன்றும் நாளும் வேலவர் உபய கதிர்காமத்திலேயே வீற்றிருந்து காட்சியளிப்பார். இவ்விரு நாட்களிலும் சிறந்த சங்கீதக் கச்சேரிகளும் நாதசுரக் கச்சேரிகளும் நடைபெறும். நான்காம் நாள் மாலை வேலவர் புறப்பட்டு வரும் வழியில் காலிமுகக் களரியில் (கால் பேஸ்) பக்தர்கள் பெருங் கூட்டமாக நின்று அவரை வணங்குவர். ஐந்தாம் நாள் அதிகாலையில் வேலவர் செட்டியார் தெருவிலுள்ள ஆலயத்திற்கு எழுந்தருளுவார்.

## காவடி விழா

**சோ**ழவள நாட்டைச் சேர்ந்த தஞ்சாவூர், மதுரை, திருச்சி முதலிய ஜில்லாக்களிலிருந்து கொழும்புக்கு வந்து அரிசிக்கடை ஜவுளிக்கடைகள் வைத்து நடத்தி வரும் தென்னிந்திய சைவத் தமிழர்கள் சம்மாங்கோட்டில் கதிர்வேலாயுதசுவாமி ஆலயத்தை அமைத்துள்ளனர். பண்டைநாட்களில் இவர்களும் இந்த ஆலயத்திலிருந்து கதிர்காமத்துக்குக் காவடி எடுத்துச் செல்வது வழக்கம். பின்னர் அந்தக் காவடியை வெள்ளவத்தையில் அவர்கள் அமைத்துள்ள பிள்ளையார் கோயிலுக்கு எடுத்துச் செல்லும் வழக்கம் ஏற்பட்டது. எனவே வருடந்தோறும் ஆடிமாதத்தில் தேன் பன்னீர் முதலிய அபிஷேகத் திரவியங்களைத் தாங்கிய காவடி முன்னே செல்ல, கதிர்வேலாயுத சுவாமி வெள்ளவத்தையிலுள்ள பிள்ளையார் கோயிலுக்கு இரதத்திலே சென்று திரும்புவது வழக்க


மாயிற்று. இதனால் இவ்விழா காவடி விழா எனப் பெயர் பெற்றது. கதிர்வேலாயுத சுவாமியும் ஆடி வேல் விழாவுக்கு முதல் நாட் காலை சம்மாங்கோட்டில் இருந்து புறப்பட்டு வெள்ளவத்தையை யடைந்து அங்கே அடுத்த இரு நாட்கள் தங்கி பக்த கோடிகளுக்குக் காட்சி கொடுத்தருளுவார். மீளவும் நான்காம் நாள் மாலை புறப்பட்டுச் சம்மாங்கோட்டிலுள்ள தமது ஆலயத்திற்கு எழுந்தருளுவார். இவ் விழாவும் அதி விமரிசையாகக் கொண்டாடப்படும். சிறந்த சைவப் பிரசங்கங்களும் நாதசுரக் கச்சேரிகளும் நடைபெறும்.

மாணிக்க நிறைகங்கை யாடியுன் னைப்பணிய
வந்திடும் பூதலத்தோர்
வாயூமர் பாடவுங் குருடர்கண் பார்த்திடவு
மலடிகள்பின் மைந்தர்பெறவும்
காணிற் குமாரவே லாவென்னு மன்பரைக்
கரடிபுலி யானைசிங்கங்
காலிற் பணிந்தஞ்சி யோடவும் கந்தனே
கண்கண்ட தெய்வமெனவே
யாணிப்பொன் முத்திமண் டபமேவு கச்சியினு
னடியேனை யாண்டுகொண்டெ
னுகத்தில் வந்தபிணி தீர்த்திடவு முன்னிற்கு
மாறுமுக மெய்த்தெய்வமே
சேணிற் புலோமசை வளர்த்தபெண் பிடிகணவ
செங்கீரை யாடியருளே
தேவரொடு மனிதர்பணி கதிர்காம வேலனே
செங்கீரை யாடியருளே.

—சுப்பிரமணியதலக் கோவைப் பிள்ளைத்தமிழ்

முதிர்காம மூடாது முந்திப் பணிவாய்
கதிர்காம வேலன் கழல்.

— குமரன்தலக் குறட்பா



# கதிர்காமவேலர்

# தோத்திரத்திரட்டு

## கதிர்காமம் மாணிக்கப்பிள்ளையார் திருவருட்பா

உன்னரு ளிலாமலிந் நாளளவும் வீணு
யுலைந்திந்த வுலகு தனிலே
யோடித் திரிந்துபொரு டேடித் திகைத்திதய
மோய்வுற் றொடுங்கி யின்றுன்
மன்னரு ணிறைந்தசர ணங்களே சரணென்று
வாடியுனை வந்த டைந்தேன்
மருவினிய திருவருள்பு ரிந்தெனிடர் நீக்கியென்
மனநினை வெலா மருவவே
நின்னடிக ளொருகாலு மறவாத நேயமொடு
நீடுகலை ஞான வுணர்வும்
நித்தியசை வாசார சுத்தமிகு பத்திபெறு
நிலைகொளரு ளறி வுதவியே
வன்மைதரு தீங்குகளை லாமொருவ வேபுவி
மதிக்கவருள் புரி கதிரைவாழ்
வடிவேல வற்குமுனம் வருவா ரணப்பிரணவ
வடிவான மாணிக் கமே. 1

— திருநெல்வேலி திருஞானசம்பந்தப் புலவர்

## திருப்புகழ்

அகரமு மாகி அதிபனு மாகி
அதிகமு மாகி அகமாகி
அயனென வாகி அரியென வாகி
அரனென வாகி அவர்மேலாய்

இகரமு மாகி எவைகளு மாகி
இனிமையு மாகி வருவோனே
இருநில மீதில் எளியனும் வாழ
எனதுமு னோடி வரவேணும்
மகபதி யாகி மருவும்வ லாரி
மகிழ்களி கூரும் வடிவோனே
வனமுறை வேட னருளிய பூஜை
மகிழ்கதிர் காம முடையோனே
செககண சேகு தகுதிமி தோதி
திமியென ஆடு மயிலோனே
திருமலி வான பழமுதிர் சோலை
மலைமிசை மேவு பெருமாளே. 2

அலகின் மாறு மாறுத கலதி பூத வேதாளி
அடைவில் ஞாளி கோமாளி அறமீயா
அழிவு கோளி நாணுது புழுகு பூசி வாழ்மாதர்
அருளி லாத தோடோய மருளாகிப்
பலக லாக ராமேரு மலைக ராச லாவீசு
பருவ மேக மேதாரு எனயாதும்
பரிவு றுத மாபாதர் வரிசை பாடி ஓயாத
பரிசில் தேடி மாயாத படிபாராய்
இலகு வேலை நீள்வாடை எரிகொள் வேலை மாசூரி
லெறியும் வேலை மாறுத திறல்வீரா
இமய மாது பாகீர திநதி பால காசார
விறைவி கான மால்வேடர் சுதைபாகா
கலக வாரி போல்மோதி வடவை ஆறு சூழ்சீத
கதிர காம மூதூரில் இளையோனே
கனக நாடு வீடாய கடவுள் யானை வாழ்வான
கருணை மேரு வேதேவர் பெருமாளே. 3

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

எதிரி லாத பத்தி தனைமேவி
இனிய தாளி னைப்பை இருபோதும்
இதய வாரி திக்கு ளுறவாகி
என்து ளேசி றக்க அருள்வாயே
கதிர ,காம வெற்பி லுறைவோனே
கனக மேரு ஒத்த புயவீரா
மதுர வாணி உற்ற கழலோனே
வழுதி கூனி மிர்த்த பெருமாளே. 5

கடகட வருவிகள் தபவரி அதிர்கதிர்
காமத் தரங்க மலைவீரா
கனகத நககுலி புணரித குணகுக
காமத் தனஞ்சம் புயனோடே
வடசிக ரகிரித விடுபட நடமிடு
மாவிற் புகுங்கந் தவழாது
வழிவழி தமரென வழிபடு கிலனென
வாவிக் கினம்பொன் றிடுமோதான்
அடவியி ருடியபி நவகும ரியடிமை
யாயப் புனஞ்சென் றயர்வோனே
அயிலவ சபரிசெய் கவிபுகல் தருகவி
யாளப் புயங்கொண் டருள்வோனே
இடமொரு மரகத மயிலிசை வடிவுள
ஏழைக் கிடங்கண் டவர்வாழ்வே
இதமொழி பகரினு மதமொழி பகரினு
மேழைக் கிரங்கும் பெருமாளே. 6

கலையிலே மைக்கண் விழியிலே பெற்ற
குருதிநே ரிட்ட விதழ்மானார்
குழையிலே தெற்று நடையிலே நெய்க்கொள்
குழலிலே பற்கள் தனிலேமா
முலையிலே அற்ப இடையிலே பத்ம
முழுநிலா வட்ட முகமீதே
முதுகிலே சுட்டி நுதலிலே இக்கு
மொழியிலே சிக்கி விடலாமோ
தலைவனே முத்தி முதல்வனே துட்டர்
இகலனே நித்தம் இளையோனே
சதுரனே பித்தர் புதல்வனே மெச்சு
சரவணா செச்சை முருகோனே
உலகனே மிக்க கதிருகா மத்தில்
ஒருவனே விஷ்ணு மருகோனே
ஒயிலனே பச்சை மயிலனே சித்ர
உருவனே பத்தர் பெருமாளே. 7

குடலிடை தீதுற் றிடையிடை பீறிக்
குலவிய தோலத் தியினூடே
குருதியி லேசுக் கிலமது கூடிக்
குவலயம் வானப் பெரிகாலாய்
உடலெழு மாயப் பிறவியி லாவித்
துறுபிணி நோயுற் றுழலாதே
உரையடி யேனுக் கொளிமிகு நீபத்
துணதிரு தாளைத் தரவேணும்
கடலிடை சூரப் படைபொடி யாகக்
கருதல ரோடப் பொரும்வேலா
கதிர்விடு வேலைக் கதிரினில் மேவிக்
கலைபல தேர்முத் தமிழ்நாடா

சடையினர் நாடப் படர்மலை யோடித்
தனிவிளை யாடித் திரிவோனே
தனிமட மானைப் பரிவுட னூரத்
தழுவும்வி நோதப் பெருமாளே. 8

சமரமுக வேலொத்த விழிபுரள வாரிட்ட
தனமசைய வீதிக்குள் மயில்போலு லாவியே
சரியைக்ரியை யோகத்தின் வழிவருக்கு பாசுத்தர்
தமையுணர ராகத்தின் வசமாகமேவியே
உமதடியு ஞருக்கு மனுமரண மாயைக்கு
முரியவர்ம காதத்தை எனுமாயமாதரார்
ஒளிரமளி பீடத்தி லமடுபடு வேனுக்கு
முனதருள்க்ரு பாசித்தம் அருள்கூரவேணுமே
இமகிரிகு மாரத்தி அநுபவைப ராசக்தி
எழுதரிய காயத்ரி உமையாள்குமாரனே
எயினர்மட மானுக்கு மடலெழுதி மோகித்து
இதணருகு சேவிக்கு முருகாவிசாகனே
அமரர்சிறை மீள்விக்க அமர்செய்துப்ர தாபிக்கு
மதிகவித சாமர்த்ய கவிராஜராஜனே
அழுதுலகை வாழ்வித்த கவுணியரு லாதித்த
அரியகதிர் காமத்தில் உரியாபிராமனே. 9

சரியையா ளர்க்குமக் கிரியையா ளர்க்குநற்
சகலயோ கர்க்குமெட் டரிதாய
சமயபே தத்தினுக் கணுகொணு மெய்ப்பொருட்
டருபரா சத்தியுட் சிவமாகித்
துரியமே லற்புதப் பரமஞா னத்தினிற்
சுடர்வியா பித்தநற் பதிநீடு
துகளில்சா யுச்சியக் கதியையீ றற்றசொற்
சுகசொரூ பத்தையுற் றடைவேனோ

புரிசைசூழ் செய்ப்பதிக் குரியசா மர்த்தியப்
புருஷவீ ரத்துவிக் ரமசூரன்
புரளவேல் தொட்டகைக் குமரமேன் மைத்திருப்
புகழையோ தற்கெனக் கருள்வோனே
கரியயூ கத்திரட் பலவின்மீ திற்சுளைக்
கனிகள்பீ றிப்புசித் தமராடிக்
கதலிசூழ் தெற்றிசைப் பயிலுமீ ழத்தினிற்
கதிரகா மக்கிரிப் பெருமாளே. 10

திருமகளு லாவு மிருபுயமு ராரி
திருமருக நாமப் பெருமாள்காண்
செகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
தெரிதருகு மாரப் பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில்விளை யாடு
மரகதம யூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி அணியருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு படவசுரர் மாள
அமர்பொருத வீரப் பெருமாள்காண்
அறுகுபிறை வாரி விரவுசடை யீசர்
அருள்செய்குரு நாதப் பெருமாள்காண்
இருவினையி லாத திருவினைவி டாத
இமையவர்கு லேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
இருதனவி நோதப் பெருமாளே. 11

மருவரு வெற்றி மலர்தொடா விற்கை
வலிசெயா நிற்கு மதனாலும்
மதில்கள்தா வுற்ற கலைபடா வட்ட
மதிசுடா நிற்கு மதனாலும்

இருகணுல் முத்த முதிரயா மத்தி
னிரவினுல் நித்த மெலியாதே
இடருரு மெத்த மயல்கொளா நிற்கு
மிவளைவாழ் விக்க வரவேணும்
கரிகள்சேர் வெற்பி லரியவே டிச்சி
கலவிகூர் சித்ர மணிமார்பா
கனகமா ணிக்க வடிவனே மிக்க
கதிரகா மத்தில் உறைவோனே
முருகனே பத்த ரருகனே முத்தி
முதல்வனே பச்சை மயில்வீரா
முடுகிமே விட்ட கொடியசூர் கெட்டு
முறியவேல் தொட்ட பெருமாளே. 12

மாதர்வச மாயுற் றுழல்வாரும்
மாதவமெ ணுமற் றிரிவாரும்
தீதகல வோதிப் பணியாரும்
தீநரக மீதிற் றிகழ்வாரே
நாதவொளி யேநற் குணசீலா
நாரியிரு வோரைப் புணர்வேலா
சோதிசிவ ஞானக் குமரேசா
தோமில்கதிர் காமப் பெருமாளே. 13

—அருணகிரிநாதர்

## கதிர்காமக் கலம்பகம்

### அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

புரிந்தை யல்லைநீ யடியவர்க் கடிமையைப்
புன்செயற் பகையாரை
யரிந்தை யல்லைநீ கதிர்க்கிரி யான்பத
மடைந்தவன் றலஞ்சூழ்ந்து

திரிந்தை யல்லைநீ மடமையே புரிந்தறத்
　　தீமையுட் செலுநெஞ்சே
கரிந்தை யல்லைநீ சாகிலை பாழ்படக்
　　காண்கிலே னுனைநானே. 14

## ஊசல்

### எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

உணர்வார்க் குணர்வரியீ ராடி ரூசல்
　　உன்னு தவர்வரியீ ராடி ரூசல்
பணவாய்ப் படுமயிலீ ராடி ரூசல்
　　படைவாய்ப் படுமயிலீ ராடி ரூசல்
மணமார் கதிர்ச்சிலம்பீ ராடி ரூசல்
　　மறையாங் கதிர்ச்சிலம்பீ ராடி ரூசல்
தணலா டிதன்குமர னுடி ரூசல்
　　தகைதீ வினைக்குமர னுடி ரூசல். 15

### நேரிசை வெண்பா

நின்று னிருந்தான் றுயின்றுன்பி னீத்தனைத்துஞ்
சென்று னெனப்படுமித் தீப்பிறப்பை—நன்றுகப்
பன்னினைந்தாய் நெஞ்சே பணிந்துகதிர் காமத்தார்
மன்னினைந்தா யல்லாய் மறந்து. 16

### எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

தகர்வரிய பவக்கடலுந் தாண்டி யப்பாற்
　　றனிமாயை தனைப்பரமா சாரி யாராற்
றிகழ்மகவான் ஞாலத்திற் றுலைத்துன் றுளைச்
　　சேர்ந்தடியார் பணிசெய்துயச் செயுநா ளுண்டோ
மகரமுலா வியவுத்தி மேல்வேல் வாங்கும்
　　வலனுடையாய் கதிர்காம மணியே யன்பர்
புகழ்மலையே மலையமலை யுவந்து பெற்ற
　　பொற்கொழுந்தே நிற்பழிச்சாப் புலைய னேற்கே.

பிறப்பகற்று நினைப்புடையீர் வாரீ ரெங்கள்
பெருமானூர் கதிர்காமக் கிரியைக் காணீர்
கறைக்கடியார் மலரெடுத்துத் தூற்றீ ருங்க
ளுக்குழற மெய்சிலிர்க்க நடனஞ் செய்வீர்
பெறற்கரிய பேறடைந்த பெரியோர் தாளைப்
பேணிடுவீர் நாணிடுவீர் பிராற்கன் பில்லார்க்
கறப்பெரிய தவமியற்றல் வேண்டாங் கண்டீ
ரமைவீரே லொப்புமக்கிங் கறிவோ ராரே. 18

நலகமிடும் பொறிக்கிரைக்கா வோடி யோடிக்
காசினியெல் லாந்திரிந்த கயவ னேனைப்
பலகலையும் பயின்றுதொழும் பான வுன்றன்
பத்தர்கள்பா தந்தொழுது பணிமேற் கொண்டு
நலகதியைப் பெறும்பரிசுன் கருணை மேவ
நரகமகன் றுய்ந்திடலெற் கெந்த நாளோ
வுலகமெலாம் பரவியசீர்க் கதிர்கா மத்தி
லுள்ளவநன் மறைமறையோர்க் குரைத்த சேயே.

### நேரிசையாசிரியப்பா

#### உயிர்வருக்கமோவை

அகரமாய் நின்றரு ளொருதனி முதல்வனை
ஆறுமா முகனை யோரிரா று கரனை
இருமையும் பயக்கு மெந்தையெம் மானை
ஈசனற் குருவை ஞானசத் தியனை
உம்பலை யிரலையை யொருங்குவைத் தவனை
ஊழியு மிறவாக் காழியின் மணியை
எண்ணிடு மாறனை யெண்ணலர் மாறனை
ஏர்மயில் வாரணத் திலகுமத் தியனை
ஐங்கர மணிநிறத் தும்பியின் றுணையை
ஒருவள வீழத் திருளொழி காமனை
ஓர்முறை நினைத்தவ ருடற்றேழ்
ஔவியப் பிறப்பொழிந் தருணிலைத் தவரே. 20

### கலிநிலைத்துறை

பிட்டுண்டு குட்டுண்டு மன்பருக்கா
யெரிகரும்பை பிடரிற்கொண்டுங்
கட்டுண்டுந் திட்டுண்டுங் கடுநுகர்ந்துங்
காத்தளித்த கருணையீன்ற
மட்டுண்ட வரிமுரலுங் கடப்பையந்தார்
மணிக்குன்றே மயலேன்றீயைத்
தொட்டுண்டு கிடக்கவென்றோ வெனைப்படைத்தாய்
கதிர்காமத் தூயவாழ்வே. 21

### எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

வாழ்க்கையெனுங் கடல்வாய்ப்பட் டழுந்தி மோக
மறிதிரையாற் பிறவிகளென் மகரந்தன்னுன்
மூழ்க்குவித்த வாணவமா தியமுகிலா னந்தோ
முறைப்படலீங் கன்றடியேன் முத்தியென்ற
சூழ்க்கைகொடு னல்லடியார் கூட்டங் கூடிக்
குணங்குறியற் றிருந்தகதிர் காமக்கோயி
லாழ்க்கைபெற நின்னருளாங் கலத்தைப் பற்றி
யகங்களிக்குங் காலமென்றோ வறியேன்யானே. 22

### நேரிசை வெண்பா

சேர்ந்தாரைக் காத்தவர்க ளுமைதபத் தாய்கருப்பத்
தூர்ந்தாரை நீரி லொழிக்குமா—லார்ந்தாங்
கதிர்காமற் செற்ற வரனிடத்தாள் பெற்ற
கதிர்காமற் குற்றவருட் காண். 23

### அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

கருணைவா ரிதிபொழிந்த கடைக்கண்க
ளீராறுங் கரமீ ராறு
மருணமுக மோராறு மீராறு
குழைத்திரளு மருளா னந்தத்

தருணமலை போன்மயிலுந் தாயரமு
    ரிருபுறனுந் தமியேன் கண்டு
வருணமழை போற்கண்ணீ ரருந்தவென்றோ
    கதிர்காமம் வாய்ந்த தேவே. 24

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

தேவனை மூவர் தேடரும் பொருளைச்
    சிறியனேன் பிழைகுறிக் காத
நாவனைக் கதிர்கா மத்தனைக் குகனை
    நான்மறை யொடுமுப நிடனைப்
பாவனை புரிவார்க் குரியசிற் பரனைப்
    பணிந்தனன் புரிந்திடத் துணிந்தேன்
சேவக மடியே னடைந்தனன் முடிவிற்
    சின்மயா னந்தமெய்ச் சீரே. 25

— சரசுவதிபீடம் கந்தப்பசுவாமிகள்

## கதிரைமலைப் பள்ளு

தூய்ய தென்கதி ரைப்பதி வேலவர்
    சூரை வெல்லத் தொடங்கிய போது
அய்ய மாக வெருண்டோடிக் கானில்
    அடைந்து போனதொ ராயிரங் காலை
வைய மீது கவிப்புல வோர்க்கும்
    மறைவல் லோர்க்குமீ ராயிரங் காலை
கையி ராறுடை யானையன் துய்யமுக்
    கண்ண னேறெனக் காலையொன் றுண்டாண்டே.

வெற்றி சேர்கதி ரைக்கும ரேசர்க்கு
    வேத நூற்படி கோவிலுண் டாக்க
உற்ற போது நிலம்பரி சோதிக்க
    உழுது தேய்ந்ததொ ராயிர கோடி

மற்ற தெல்லாம் வயலுழும் போதினில்
மாணிக்கம் பட்டுத் தேய்ந்தன போக
அற்பு தன்னறு மாமுகன் மாதுலன்
அண்ணன் பாலொர் கலப்பையுண் டாண்டே. 27

கன்னல் சேர்வயற் றென்கதி ரைப்பதிக்
கந்தன் கோவிலில் மாமதில் செய்ய
மின்னுஞ் சுண்ணமில் லாமல்வி சாரிக்கும்
வேளையில் வந்து காட்சி கொடுத்தோன்
சொன்ன தோரிடத் திற்சுதை வெட்டித்
தொலைந்து போனதொ ராயிர கோடி
என்னி டத்தினில் வேறொன்று மில்லை
இந்த மண்வெட்டி யொன்றுந்தா னுண்டே. 28

## கதிர்காம வேலவர் திருவருட்பா

அரிமருக முருகசர வணபவா வெனுமடிய
ரச்சந்தவிர்த் தருண்மயில்
ஆயிரத் தெட்டண்ட முட்டையென வேயணைத்
தசுரரைக் கொன்றிடுமயில்
பெரியநவ கண்டமொடு மேருகிரி குலகிரி
பெருங்கடல்க ளுள்ளடக்கும்
பெருஞ்சக்ர வாளகிரி யரைநொடியி னுக்குளே
பிரதக்க ணஞ்செயுமயில்
விரிபணு டவியுரக முங்கோடி யண்டமும்
விழுங்கியே பின்னுமிழ்மயில்
வேலாநீ யேறுமயில் வெகுபராக் கிரமமெனில்
வினையனேன் மாயையென்னுங்
கரியபாம் பைப்பொடி படுத்தலரி தோவுன்
கலாபமயி லுக்கருளுவாய்
கங்கையுமை பாலனே கதிர்காம வேலனே
கந்தசுவா மிக்கடவுளே. 29

—தருமபுர ஆதீனம் 10-வது குருமூர்த்தம்
ஸ்ரீலஸ்ரீ சிவஞானதேசிகசுவாமிகள்

## கதிர்மலைக் குமரவேள் துதி

அரகரவென் றநுதினமுந் தொழுதே நின்றேன்
ஆருயிர்சென் றணைந்துமுகம் ஆறு ளானைச்
சிரநடுவி லிருபதமும் திருந்த நாட்டிச்
சிவாயஉயிர் ஓங்காரத் தீபம் ஏற்றிப்
பரவெளியில் ஒளிமதியோ டிரவி சூழப்
பங்கயப்பூங் கதிரைமலை யாளன் எங்கள்
குருபரனை அமரர்தொழுங் குமர வேளைக்
கும்பிட்டேன் என்பிறவி பின்விட் டேனே. 30

ஈரெட்டுக் கெட்டாத கலைக்குள் ளானைச்
சிற்பரனைச் சிற்பரத்தில் நடஞ்செய் வானை
ஓரெட்டாய் நின்றகதிர் காமத் தானை
ஒருமுகனை அறுமுகனை ஒளிக்குள் ளானைப்
போரிட்ட சூரனையைம் புலன்கள் தம்மைப்
பொடிபடுத்தி நிலைநிறுத்தும் புகழி னானைக்
கூறிட்ட கதிரைமலைக் குமர வேளைக்
கும்பிட்டேன் என்பிறவி பின்விட் டேனே. 31

— ஏட்டுப்பிரதி சென்னைப்பல்கலைக்கழகம்

## கதிர்காமசுவாமி பேரில் மாலை

மெய்யான போதந் தனையறி
யாமல் விழுங்கியுணப்
பொய்யான தேகத்தை யானென்று
கெட்ட புலையற்குமுத்
தய்யா கமலத் திருசே
வடியை யளித்திடுவாய்
கையா றிரண்டுடை யானே
கதிரக டாசலனே. 32

சீர்கொண்ட செங்க மலவல்லி
பங்கனுஞ் செம்பொற்பணி
வார்கொண்ட கொங்கை மலேவல்லி
பங்கனும் வானவரும்
தார்கொண் டணிந்து தொழும்பாத
னேநறுந் தாரளகக்
கார்கொண்ட வள்ளிதன் பங்கா
கதிரக டாசலனே. 33

மட்டழ கான கருங்கூந்த
லாள்கொண்ட மையலுக்காய்
நெட்டழ கான தொடைகேட்க
வந்திடு நேரிழையென்
பட்டழ கான மொழிபக
ராமல் பதைக்கச்சொன்னுய்
கட்டழ காகதிர் வேலா
கதிரக டாசலனே. 34

— தஞ்சாவூர் நூல்நிலையத்திலுள்ள
ஏட்டுப்பிரதியிலிருந் தெடுக்கப்பட்டன

## தனித்தமிழ்த் தலைமைக் கதிரைமலைக்
## காந்திவேன் முருகன் திருப்பள்ளியெழுச்சி

காந்தியி னொளிகொடு கதிரவ னெழவே
கதிரையிற் குணதிசைக் காந்தியு மெழுந்த
தேந்திழை பாரத வெம்மையு மெழுந்தாள்
இரவெனு மிடிபிணி யிகல்பகை விடிந்த
மாந்திய பொய்ம்மத மயல்விண்மீ னிரிந்த
மலர்ந்தது வாய்மைமெய்க் கமலநல் லருளாம்
ஏந்திய வாரணம் எழுந்துநின் ருர்த்த
தெம்முரு காபள்ளி யெழுந்தரு ளாயே. 35

அள்ளிநின் னருடனை மழையென வழங்கி
ஞாலுடலந் தலைக்குரு தணுவள வன்றே
துள்ளிநின் றாடு மயின்மிசைத் துவன்றித்
துட்டரைக் கருணையிற் சிட்டர்க ளாக்கி
யுள்ளினின் றமைக்காத் துலகினில் வாய்மை
ஒழுக்கமன் பருணல மோங்கிநின் றிலங்க
வள்ளிதெய் வானை காந்திய கதிரை
மலைமுரு காபள்ளி யெழுந்தரு ளாயே. 36

—பண்டிதர், க. சிதம்பரநாதன்

## கதிரைமலைப் பேரின்பக்காதல்

ஆரணஞ்சேர் தென்கதிரை யற்புதனைப் போற்றிசெய்து
காரணஞ்சேர் பேரின்பக் காதலதைக் கூறலுற்றேன். 37

பிறந்தபிறப் பெல்லாநான் பேதலித்துச் சண்முகனை
மறந்து மறந்துபட்ட மாற்றமிங்கு சொல்லலுற்றேன். 38

கந்தமலர் தென்கதிரைக் கந்தரைநான் போற்றுமற்
பந்தவினை தந்ததொல்லைப் பாசத்திற் பட்டுவிட்டேன்- 39

முத்தி கொடுக்குமலை மூவுலகும் போற்றுமலை
சித்தி பொருந்துமலை தென்கதிரை மாமலையே. 40

வாழுங் கதிரைமலை வள்ளலைநான் போற்றிசெய்து
நீளும் பவக்கடலை நீக்கவறிந் தேனிலையே. 41

நொந்தடியேன் சிந்தை நுடங்கும்போ தென்முன்னே
வந்துதவ வேணுமினி வாழ்கதிரை வேலோனே. 42

திருந்தும் புவியிற் சீவர்களையீ டேற்றுகின்ற
மருந்துன் னிரக்கமம்மா வள்ளியம்மைத் தாயாரே. 43

இரும்பனைய நெஞ்சனியா னீடேற நீகடைக்கண்
திரும்புமம்மா தென்கதிரைத் தெய்வயானைத் தாயாரே. 44

தன்னை மறந்தாலுந் தவத்தைமறந் தாலுமினி
யுன்னை மறவே னுயர்வடிவே லாயுதமே. 45

அழுதழுது நானுரைத்த வல்லவெல்லாம் வேலவர்க்குத்
தொழுதுநின்று மெல்லமெல்லச் சொல்லுமயில் வாகனமே.

குன்றெறிந்த வேலோய்நின் கோலமலர்ச் சேவடிகள்
என்று மறவாம லிருக்கவரந் தாராயோ. 47

மிடிமைத் துயரால் மெலியாம லெப்பொழுதும்
அடிமைக் குடியாக வாண்டிரக்கஞ் செய்வாயே. 48

## கதிர்காமத் தாண்டகம்

கற்றவர்தங் கருத்தெழுந்து கருணை பூக்குங்
கற்பகமே செழுங்கனியே சுவையே மோனம்
பெற்றவருள் ளுணர்ந்துணர்ந்தும் பேசா வின்பப்
பெருவாழ்வே கருவாழ்வே பெரிதென் றுன்னி
நற்றவத்தோர் பாலனுகா நலமி லேன்றன்
நவைதீர்க்க வருவதென்றோ நாதா வாதக்
கற்றலமுட் டோன்றாத கதிர்கா மத்தின்
கடவுளடி யகம்புறமுங் கருதாய் நெஞ்சே. 49

— சண்முகானந்த சுவாமிகள்

### கந்தகுருமணிச் சந்தவிருத்தம்

மண்ணுள்வார் வாழ்வுமவர் மகிழ்ச்சியொடு புகழும்
மறிதிரைக்கு நிகரெனவே மதித்துமுளங் கருதேன்
விண்ணுள்வா ருலகுடலும் சுகபோக வாழ்வும்
வேதனையுங் கேட்டதனை வெறுத்தொழித்தே னந்தோ
அண்ணுநின் பொன்னருளா லங்குமிங்கு மெங்கும்
அடைவதென்று லடியேனுக் காரருளாம் பொருளைக்
கண்ணுலுங் கடைக்கணித்தா லுய்ந்திடுவே னெந்தாய்
கதிர்காமப் பதிவிளங்குங் கந்தகுரு மணியே. 50

— சண்முகானந்த சுவாமிகள்

## கதிர்காம வேலவர் பதிகம்

ஏர்பூத்த மெய்யன்ப ருள்ளச் சிலம்பிலெழு
மிரவிநிக ராறுமுகமும்
இருவினைக் காடெரித் தருளமுத மழைபொழியு
மீராறு கமலவிழியுங்
கார்பூத்த பாசவிருள் கடியுமிள முறுவலுங்
கனககுண் டலநிரைகளுங்
கதிர்வெயி லெறிக்குநவ ரத்நமணி மகுடமுங்
கலனிலகு மகலமார்புந்
தார்பூத்த பன்னிருபு யாசலமு மிடர்நீக்கு
சத்திவடி வேலுமணைமார்
சாருமிரு பாகமும் பாததா மரையுமாய்ச்
சண்டப்ர சண்டமயின்மேற்
சீர்பூத்த கருணையுரு வங்காட்டி விழிமாசு
தீர்த்தெனக் கருள்செய்குவாய்
தென்கதிரை மலைவேல வன்பர்மகி ழனுகூல
செந்தியம ருமைபாலனே. 51

மன்னுயிரின் நீவைத்த வெல்லைக் கடங்காத
வான்கருணை யாறுபெருகி
மாணிக்க கங்கையாய் வினைமர முரித்துவெம்
மாயைமுத லறவரித்து
முன்னுயிர்க ளிருண்மலங் கழுவிக் கருக்குழியை
மூடிக் களைப்பகற்றி
முத்திக்க ரைக்கணே விடுமென்ப ரந்நதியின்
மூழ்கியிரு விழிசிறக்க
என்னுயிர்க் குயிரேதெ விட்டாத வின்பமே
யின்பத்தி லெய்துசுகமே
என்றென்று பாடியுன் னருள்வடிவு கண்டுள
மினிக்கின்ற நாளெந்தநாள்

சின்மயசொ ரூபனே குன்றுதோ ருடல்புரி
தெய்வமே யுனைநம்பினேன்
தென்கதிரை மலைவேல வன்பர்மகி ழனுகூல
செந்தியம ருமைபாலனே. 52

—நவாலியூர், க. சோமசுந்தரப் புலவர்

## முருகன் அருள்வேட்டல்

## கதிர்காமப் பதிகம்

கலியுகத்துங் கண்கண்ட கற்பகமே
கருத்தினிக்குங் கரும்பே! தேனே!
வலியிழந்து பிணியடைந்தேன் மலரடியே
துணையென்று மருந்து கண்டேன்
நலிவழித்துப் பொன்னுடலம் நல்கியருள்
நாயகனே! ஞான நாதா!
கலிகடலில் மலரிலங்கைக் கதிரைவேற்
பெருமானே! கருணைத் தேவே.

தீராத பிணியெல்லாந் தீர்த்தருளும்
மருந்தாகித் திகழுஞ் சேயே!
பாராத நாளெல்லாம் பாழ்நாளே
யென்றுணர்ந்தேன் பரமா! நின்னைச்
சேராத பிழைபொறுத்துத் திருவடிக்கே
அன்புசெயுஞ் சிந்தை நல்காய்
காராலுங் கானமர்ந்த கதிரைவேற்
பெருமானே! கருணைத் தேவே.

விழியில்லார் விழிபெற்றார் செவியில்லார்
செவிபெற்றார் விளம்பும் வாயில்
மொழியில்லார் மொழிபெற்றார் முருக! நின
தருளாலே, மூட நாயேன்

வழியில்லா வழிநின்று வளர்த்தவினை
வேரறுப்பாய் வரதா! மூங்கில்
கழிவில்லார் களியாடுங் கதிரைவேற்
பெருமானே! கருணைத் தேவே.

ஆண்டவனே! உடலளித்தாய் அதைநின்றன்
ஆலயமா யாக்கா திங்கு
மூண்டசினை விலங்குலவுங் காடாக்கும்
முயற்சியிலே முனைந்து நின்றேன்
நீண்டரிய சிவசோதி! செய்ந்நன்றி
கொன்றபெருஞ் சிதட னானேன்
காண்டருநித் திலங்கொழிக்குங் கதிரைவேற்
பெருமானே! கருணைத் தேவே.

பகலெல்லாம் நின்நினைவே இரவெல்லாம்
நின்கனவே பாவி யேற்குச்
செகமெல்லாம் நினைக்காணச் சிவகுருவே
யெழுந்தருளச் சிந்தை கொள்க
குகவென்றுற் பிடியுடனே கொல்யானை
ஒதுங்கிநிற்குங் குணமே மல்கக்
ககனவழி சித்தர்தொழுங் கதிரைவேற்
பெருமானே! கருணைத் தேவே.

மண்பொன்னை மங்கையரை மாயையென
மறைந்தொழுகல் மதியா துங்கொல்
மண்பொன்னில் மங்கையரில் மாதேவ
நீயிலையோ மயக்க மேனோ
பண்ணிசைபோல் எங்குநிற்கும் பரமனினை
மறுத்தொழுகல் பாவ மன்றோ
கண்கவரும் மணியருவிக் கதிரைவேற்
பெருமானே! கருணைத் தேவே.

நீலமயக் கடலினிலே நீண்டெழுந்த
பவளமலை ! நின்னை நாடிச்
சீலமுடன் இருங்காட்டிற் செல்வோரைக்
கரிகரடி சிறுத்தை வேங்கை
பாலணுகிப் பாயாது பத்தியிலே
மூழ்கிநிற்கும் பான்மை யென்னே
காலமிடங் கடந்தொளிருங் கதிரைவேற்
பெருமானே ! கருணைத் தேவே. எ

கடலெல்லாங் கதிரையென்று கைநீட்டி
வழிகாட்டக் கரிய காட்டின்
முடியெல்லாங் கதிரையென்று முழங்கியன்பால்
வரவேற்ப மூள்வி லங்கு
கடலின்றிக் கதிரையென்று புறமேகப்
புட்களெலாங் கதிரை யென்றே
கடிதணைந்தே உடன்தொடருங் கதிரைவேற்
பெருமானே ! கருணைத் தேவே. அ

சாதிமதப் பிணக்கின்றிச் சமரசமா
யெல்லோருஞ் சார்ந்து சென்றே
ஆதியந்த மில்லாத அறுமுகனே
யென்றுன்னை அரற்று கின்றூர்
சோதி!நின தருளவர்க்குத் துணைபுரிதல்
இயல்பன்றோ சொல்ல வொண்ணுக்
காதலன்பு கரைகடந்த கதிரைவேற்
பெருமானே ! கருணைத் தேவே. க

தண்ணமருங் கடலெழுந்த தரைக்காட்டில்
தமிழ்க்கோயிற் றனிமை கண்டால்
மண்ணருவி 'முழவதிர மயிலாடக்
குயில்கூவ வண்டு பாடும்'

பண்மயத்திற் புலனுழைந்து பகரரிய
அமைதியுறும்; பண்பு கூடும்
கண்மணியே ! கருத்தொளியே ! கதிரைவேற்
பெருமானே ! கருணைத் தேவே. கo (62)

—திரு. வி. கலியாணசுந்தரமுதலியார்

## முருகன் சந்நிதி முறை

முதிர்காம வேட்கையினால் முத்தரும்ப விழிநீர்
எதிர்காமப் பேய்நடுங்கச் 'சிவமுருகா' வென்றே
அதிர்நாமம் பாடிப்பர மானந்தக் கூத்தாடிக்
கதிர்காம வேலவனைக் கண்குளிரக் கண்டேன்.

அருளொளிருந் திருமுகமும் அறிவொளிரும் விழியும்
பொருளுணர்த்தி மலருகின்ற புன்னகைவாய் அமுதும்
இருளரக்கர் குலமழித்தே ஏந்தியகை வேலும்
கருணைநதி பொங்கியெழும் கழலிணையுங் கண்டேன். உ

அன்புமண மலர்மாலை ஆர்வமுறச் சூட்டி
என்புருக மனங்குழைந்தே என்முகம்பார்த் தருளாய்
இன்பமயச் சிவக்கனலே இன்னுயிருக் குயிரே
என்றடியில் வீழ்ந்தழுதேன் என்னிறையைத் தொழுதேன்.

அப்பவுன்னை அன்புடனே அடிபணிந்தேன் சாமி
செப்புமடி யார்குறையைத் தீர்த்தருளும் வேலா
ஒப்புயர்வில் லாதவனே உள்ளமணி விளக்கே
இப்புவிக்குச் சற்றேநீ இரங்கிவரந் தருவாய். ச

பொன்மலைகள் கேட்கவில்லை புகழ்கேட்க வில்லை
தன்னலமாம் போகசுகந் தனைக்கேட்க வில்லை
இன்னலிரு ளச்சமற்றே இகலிடர்க ளற்றே
என்னவர்கள் வாழ்வருள் இதுவென்றன் முறையே. ரு

புன்னெறிகள்போற்றுகின்றார்பொய்யொழுக்கங்கொண்டார்
வன்மனத்தர் கொலையூணால் வயிறுவளர்க் கின்றார்
நன்மையிதென் றறியாதார் நான்சொன்னாற் கேளார்
என்னரசே யிதுதருணம் என்னவரைக் காப்பாய். ௬

உலகமெல்லாம் அரக்கர்பயம் உயிர்க்குறுதி யில்லை
பலசாதி பலசமயம் பலகட்சிக் கொள்கை
சலசலக்கும் போலிநடைச் சந்தடிகள் வளர்ந்தே
கலகமெங்கும்ஓங்கிநிதம்இரத்தம்கரைபெருகுதையே. ௭

அன்னியர்கள் வந்தார்கள் ஆலயத்தைப் பிடித்தார்
பொன்னைக் கொள்ளையடித்தார் போதமதைக் கெடுத்தார்
உன்பெருமை தனக்குமவர் உலைவைத்த தென்னே
தென்றமிழர் தொழுகின்ற தேவர்படைக் கிறைவா. ௮

வல்லரக்கர் வன்மையின்றி வறுமையிரு ளடிமைத்
தொல்லையின்றித்துயரமின்றித்தொழிலற்றேசுகிக்கும்
செல்வர்களின் கொடுமையின்றிச் சேவகராய் உனக்கே
எல்லாரும் அருட்பொதுவில் இன்புறநீ யருளாய். ௯

புண்ணாறி எளியவர்கள் பொதுநலங்கள் ஓங்கித்
தண்ணாரும் சுத்தசிவ சன்மார்க்கம் போற்றி
அண்ணாவுன் அருளாடல் அன்பொளியாய்ப் பரவிக்
கண்ணாரக் கண்டிடவே காதல்கொண்டேன் முருகா. ௰

பரமகுரு பரகுகனே பரசக்தி மகனே
ஹரஹரஓம் ஷண்முகனே அஞ்சலியீந் தருள்வாய்
பரதருமத் தளைநீங்கிச் சமதருமம் பரவும்
வரம்வேண்டிஉன்னடியைவைத்தனனென்முடிமேல். ௧௧

வஞ்சனைசெய் மாயமற வாய்மையொளி காட்டாய்
அஞ்சவரும் தீவினையை அக்கணமே மாற்றாய்
நெஞ்சினிலே நீண்டுயரும் சிவஞான நெருப்பே
தஞ்சமுனை யன்றியில்லை சரவணனே சரணம். ௧௨(74)

—சுவாமி சுத்தானந்த பாரதியார்

# கதிரகாமப் பிள்ளைத் தமிழ்

### மொழிபயிலல்

குறிய மதத்த ரறமெம்பாற்
கூறக் கேட்ட செவிப்புண்ணுங்
கொடாதா ரிரப்போர்க் கடிந்துரைத்த
கொடுஞ்சொற் கேட்ட செவிப்புண்ணுஞ்
சிறிய குடியிற் பிறந்தபழிச்
செல்வர் வறிய புலவர்தமைச்
செருக்கி யிழிப்பக் கேட்டிருந்த
தீயூழ் படைத்த செவிப்புண்ணும்
நறிய வமிழ்திற் றமிழ்கேடு
நண்ணப் புறஞ்சொல் வழக்காறு
நாளுங் கலந்து வரல்கேட்டு
நனிசீ வடியுஞ் செவிப்புண்ணு
மறிய வொழியக் கதிரமலை
யழகே! யமிழ்தம் பொழிகவே
யம்மா! வப்பா! வென்னுஞ்சொல்
லமிர்தம் பொழிக பொழிகவே. 75

### உணவூட்டல்.

ஆழி கடைந்து குடம்நிறைத்த
வமுது மிதற்கு நிகரல்ல
வந்தண் வேள்வி யவிசொரியு
மதுவு மிதற்கு நிகரல்ல
வாழி திருந்து செந்தமிழின்
வழக்கு மிதற்கு நிகரல்ல
வள்ளி யூடிக் குழைந்துசொலும்
வழக்கே யிதற்கு நிகராகும்

காழி ஞானப் பால்குழைத்த
கலையு மிதற்கு நிகராகும்
கதிர காமத் தன்பர்பலர்
கனிவுங் குழைத்த திதுவாகும்
கோழி கூவுய் கொடியசைக்குங்
கோவே சிறிதே யுண்டருளே
குறித்த வருண்மெய் கொழுத்துயரக்
கோவே சிறிதே யுண்டருளே. 76

## தாலாட்டல்

நீரின் முளைத்த மாவீழ
நெருப்பின் முளைத்தின் னருடமைத்து
நினைவு பூத்துப் புலங்காய்த்து
நிறையப் பழுத்த கற்பகமே
நேருன் னடித்த ணிழலன்றி
நிற்பார் வெப்பந் தணிவாரோ !
நெடுநாள் வானோர் வாழ்வாரோ ?
நீதா னூரோ ? யாமாரோ ?
வோரின் னெனச்சொல் வடித்துணர்வா
ருலவாப் பெருமை யாராரோ ?
வுணர்வார் கூற்றங் கொள்ளுங்கா
லூற்றார் பெற்று ராராரோ ?
காரின் மலருங் கதிர்காமக்
கடம்பா ! தாலோ தாலேலோ
கலைமான் பாடக் கண்வளராய்
கனியே! தாலோ தாலேலோ. 77

உணர்நின் றந்தைகொ டாதொழிந்த
வொருமாம் பழத்திற் கழுதாயோ ?
வுயிர்கள் பிறந்து படும்பாட்டிற்
குருகிப் பொருமி யழுதாயோ ?

புணரும் காழிப் பெருந்தகைதான்
புடைத்தான் கொல்லோ வேனழுதாய்?
புலவர் மகளிர் கவுட்கிள்ளப்
பொருதோ? பின்னை யேனழுதாய்?
வணர்மென் குழலி முலைச்சாய்ந்து
மார்பம் பாய லாச்செங்கண்
வளர்வாய் தவத்த ரெய்த்தலச
வாரா யன்பர் கசிந்துமலர்
கொணரும் கதிர மலைவந்த
குழகா! தாலோ தாலேலோ
கொடும்போ ரசைவு தவிர்துயிலைக்
கொள்ளாய் தாலோ தாலேலோ. 78

## முத்தந்தருதல்

வேய்முத்த மும்மஞ்சின் மின்முத்த மும்மிப்பி
விண்முத்த முங்கொம்பியல்
விழைமுத்த மும்மாதர் கழைமுத்த மும்மீனின்
விளைமுத்த மும்மேனவுந்
தேய்முத்த மெய்யறிஞர் தேடாத முத்தமுண்
டஞ்சுவையி லாமுத்தமோ
திரியமா றும்முத்த முத்தமோ? கதிர்மலைத்
திருநீறு பூத்தசெந்தீத்
தூய்முத்த மீன்முத்த மே!குறுவெ யர்ப்புள்ளி
சொரிமுத்த நெற்றியினர்கண்
டுளிமுத்த முக்கமதி முகமுத்த முத்திநகு
தொகைமுத்த முண்டுகனியும்
வாய்முத்த மேமுத்த முலகெலாம் போதாத
வாழ்முத்த முண்ணவருளே
வானுமுயி ருங்கைத்து வேண்டேம்வெ றுத்தயாம்
வாழ்முத்த முண்ணவருளே. 79

வருகை

கூட லமணர் கூட்டழித்த
குழந்தாய்! வருக வானவர்கோன்
குடுமி முடியை யுடைத்ததொடிக்
கோப்பாண் டியனே! வருகதுவர்க்
கோடல் புனைய வருககுலக்
கொழுந்தே! வருக பிசைந்துமுலை
குடிக்க வருக வொருமுத்தங்
கொடுக்க வருக பொழுதொழிந்த
தாடல் வருக நெய்யழிய
லாமோ? வருக சிறுரடிப்ப
ரரசே! வருக வழக்காட
லழகோ? வருக மாமன்மகள்
தேட வருக தெள்ளமுதே!
திருவே! வருக வருகவே
தெவிட்டா தொழுகுங் கதிர்காமத்
தேனே! வருக வருகவே. 80

—சிவங். கருணாலயபாண்டியப்புலவர்

## கதிர்காம வேலர் பதிகம்

பார்பூத்த பழவினைகள் பாய்ந்தோட மும்மலப்
பகையோட அகம தோடப்
பண்பிலிக ளுறவோட மலரருட் பதநாட
பரிவுகொண் டாளு மரசே!
தார்பூத்த பன்னிருகை மணியே! சுயம்புவே!
தரங்கமலை யவுணர் தீயத்
தாமரைம லர்க்கரமி லங்குவடி வேல்விடுந்
தற்பரா! சமரில் விஜயன்

தேர்பூத்த மாயன்மகிழ் மருகனே ! முருகனே !
தேவர்சிறை மீட்ட குகனே !
தெய்வங்க ளேத்திமகிழ் செந்தமிழ்ப் புலவனே!
தெள்ளமுத வாரி சுவையே !
சீர்பூத்த ஞானவா னந்தமயி லோங்கியே
சிறந்தகதிர் காம மோங்குந்
திவ்யமங் களபோத ! செய்யபங் கயபாத !
தெய்வகுஞ் சரிநா தனே. 81

கார்வளரு முலகநடை கருதாமை வேண்டுமுன்
கழலுளங் கருதல் வேண்டுங்
கதிவேண்டு முன்கருணை நிதிவேண்டுங் கந்தழிக்
கடவுண்மணி காணல் வேண்டும்
பார்வளரு மறைமுடிவின் முடிவான பொருளினைப்
பற்றிப்பி டித்தல் வேண்டும்
பத்திவேண் டும்பண்பு முத்திவேண் டும்முனிவர்
பகரரிய செல்வம் வேண்டு
மேர்வளரு மென்னம்மை பிரணவப் பிஞ்ஞுகியி
னெழிலோங்க வேண்டு மெளியே
னெங்கணுஞ் சென்றுனது விளையாட லைப்புகழ்ந்
தின்பமொ டிறைஞ்சல் வேண்டுஞ்
சீர்வளரு மூவர்முத லரகரவெ னும்மொலி
சிறந்தகதிர் காம மோங்குந்
திவ்யமங் களபோத ! செய்யபங் கயபாத !
தெய்வகுஞ் சரிநா தனே. 82

ஆங்கார மென்னுமத யானைவாய்ச் சிக்கிநல்
லறிவெனுங் கண்ணி பூந்தே
யவலக்கு ழிக்குறுதி யாழ்ந்தியுழ லடியனை
யணுகியரு ளமுத மூட்டி

ஊங்கார குண்டலியெ னம்மைபா லொப்புவித்
துலப்பிலா னந்த நிலையத்
தோங்கப்பு ரந்தருளு தாரகுண சீலனே!
யுக்ரகெம் பீர தரனே!
ஓங்கார முணர்கிலா நான்முகவ னைச்சிறைசெய்
தொளிர்ஜீவ சாட்சி மணியே
யுயர்தவர கத்தியர்த முடிமலரு பொற்கமல
முபயபத ஜோதி வெள்ளந்
தேங்காத பேரின்ப மோங்கத்தி னைத்துலவு
செழியகதிர் காம மோங்குந்
திவ்யமங் களபோத! செய்யபங் கயபாத
தெய்வகுஞ் சரிநா தனே. 83

—சுவாமி நித்தியானந்த சரஸ்வதி

## கதிர்காம வேலவர்மேல் பத்திக்கவிகள்

எந்தவினை வந்தாலு மென்னைக் கதிர்காமக்
கந்தனந்த வேளைவந்து காப்பதுமெய்—நொந்துமுகக்
கோட்டமேன் புன்பழிவாங் குங்குணமே னுருமன
வாட்டமேன் நெஞ்சே மகிழ். 84

### கலிப்பா

எந்தை நீயெனைக் கைவிடி லார்க்குரைத்
தென்குறை யொழிப் பேனிரங் காதவன்
சிந்தை கொண்டகொ டியனென் றுலுனைத்
தேடி நாடிக் குறைக ளுரைப்பது
நொந்தி ரவுப கல்கல்லு முள்வெயில்
நோக்க லற்றுத் திரிவதுன் தொண்டர்கள்
விந்தை யேகதிர் காமப் பதியுறை
வேலனே துதி யென்குல தெய்வமே. 85

—உரும்பராய், க. வேலுப்பிள்ளை

## கதிரை நான்மணி மாலை

### நேரிசை வெண்பா

காரூர்ந்த கோட்டுக் கதிரைமலை யையாநீ
யேரூர்ந்த குஞ்சரத்தி லின்பவனி—சீரூர்ந்த
காட்சிகண்டு தண்டியாய்க் கையிடையும் மெய்வெளியாய்ப்
பூட்சிவிட்டாள் காவாயோ போந்து. 86

### அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்

குமரா குகசண் முகநாத
குருவே யமரர் குடிதழைக்க
வமரா பதியை யரசளித்த
வத்தா கதிரை யருள்வடிவே
நமரா தரவற் றுனதருளே
நாளுந் துணையென் றிருப்பேனைச்
சமரா போகந் தருதல்நன்றோ
தரியேல் விரைந்து தணித்தருளே. 87

### கட்டளைக் கலித்துறை

பூணுக்கு மூணுக்கும் பொற்புக்கும்
பொன்னுக்கும் போற்றுமனைத்
தூணுக்கு நாரிக்குந் தூசுக்கு
நேடித் துதித்துநின்று
வீணுக் குழன்றழிந் தெய்த்தேன்
கதிரை யிளிர்திரைமுன்
சேணுக் கழுது தொழுதுநின்
றேனில்லைச் செய்வதென்னே. 88

—வண்ணைநகர், செ. வை. செல்லையாபிள்ளை

## கதிர்காமசுவாமி பஞ்சரத்தினம்

தந்தைதாய் தெய்வநீ கதியன்றி யென்றனைத்
தற்காக்க வொருவரில்லைத்
தைரியஞ் சொல்லவும் தாபமது தீர்க்கவுந்
தரணிதனி லெவருமில்லை
சந்ததமு நால்வேதம் வந்தனைகள் செய்குதே
சரணகதி யென்றவர்க்கு
சாலோக சாமீப சாரூப மேலான
சாயுச்சியந் தருகுவாய்
வந்தனஞ் செய்யுமுன தன்பற் கிரங்கிநீ
வண்மையுடன் வரமளிப்பாய்
வள்ளிதெய் வானையுடன் வாழுமயி லேறியே
வரவேண்டு மென்றனருகே
தந்திர மிகுந்ததிரு மாலுக்கு மருகனே
தற்பரா னந்தபரனே
தகதகென மயிலேறி விளையாடி நடனமிடு
கதிர்காமத் துறைகடவுளே. 89

நஞ்சுண்ட பரமகுரு வானதொரு தெய்வமே
நாதனே குமரகுருவே
நாயகா வுன்னைவிட வேறுதுணை யில்லையெனை
யாதரிப் பவருமில்லை
பஞ்சைநிகர் நானென்ன பாவங்கள் செய்தனோ
பரதவித் திடநீதியோ
பாரா திருப்பதும் தர்மமோ யுன்னையினிப்
பார்த்தவர்க ளேசார்களோ
கொஞ்சமென் றென்னைநீ விட்டுவிட் டாலுமே
குழந்தையான் விடுவதில்லைக்
கோபமோ வென்மீதிற் றுபமோ வென்செய்வேன்
கொத்தடிமை கொண்டருளுவாய்

தஞ்சமென்றே யுனைக் கெஞ்சியே நொந்திடத்
தற்காத் தெனையாளுவாய்
தகதகென மயிலேறி விளையாடி நடனமிடு
கதிர்காமத் துறைகடவுளே. 90

## கதிர்காமமாலை

குஞ்சர மீது குலவிடுங் கோலத்தைக் கூடுதொண்ட
ரஞ்சலி செய்து மரகர வென்று மருள்நடனந்
தஞ்செய லற்றுச் சரண்சர ணென்றடி சாருவதே
மஞ்சுறை தென்கதிர் காமத்துச் சந்நிதி மாண்புகளே.

உள்ளதெல் லாமுன் னடிக்கே தெரியு முரைக்கவினி
யெள்ளள வாகினு மென்பா லிலையதை யேற்குமருள்
வள்ளலு முன்னை யலாதிலை வேறு வழியுமிலைக்
கொள்ளலுன் பாரங்கதிரையி லோங்குங் குமரையனே.

பற்றொன் றிலாமையைப் பற்றினர்
தங்களைப் பற்றிநிற்கும்
சிற்றம் பலத்தொளிர் சேயே
அறுவர் திரவியமே
பெற்றம் புயத்தருள் பேணிட
வென்றும் பெருமையொடு
முற்றும் திருவருள் செய்வாய்
கதிரை முழுமுதலே. 93

—வண்ணைநகர், நெ. வை. செல்லையாபிள்ளை

## கந்தனிருக்கும் கதிரைமலை

செல்வக் கதிர்காமம் சென்று தவம்புரிய
மெல்ல எனக்கருளும் வேலோனே—பொல்லாத
காலன் வரும்போது காப்பேன் அபயமென்றுன்
கோலத்தைக் காட்டாய் குறித்து. 94

ஆறுமுகத் தெம்மானே ஐயா கதிரமலை
ஏறுமருள் இன்றெனக்குத் தந்தவா — கூறுமுனது
அண்டர் புகழும் அரிய மலர்ப்பாதத்தைக்
கண்டுமகி ழாவோஎன் கண். 95

— ந. சிவக்கொழுந்து

## கதிர்காமநாதன் திருப்பள்ளியெழுச்சி

### எண்சீர் ஆசிரிய விருத்தம்

திருவரு ளாமென விடிந்தது காலை
திகழொளி பரப்புசெங் கதிரவ னெழுந்தான்
குருகுகள் மதுபொழி மலர்வனத் திடையிற்
கூடிநற் கீதங்க ளியம்பின கேளாய்
உருகிநைந் தடியவ ருன்புகழ் கூறி
ஒளிவளர் கழலிணைத் தொழுதிட வணைந்தார்
கரிமிகு பயில்கிரிக் கதிரையிற் குமரக்
கடவு ளேபள்ளி யெழுந்தரு ளாயே.

மாயைசேர் பேரிருள் மறைந்தது மாந்தர்
மணிதிகழ் கங்கைவந் தணுகினர் திரண்டு
வேயமை தோளினர் வீணைமென் கரத்தர்
விரும்பியுன் மெய்ப்புகழ்ப் பாடிட விரைந்தார்
சேயநின் பொன்னடிக் கதிரொளி பரப்பிச்
சுருதிக ளியம்பின சூரிய னெழுந்தான்
பாய்மரை பலதிரி கதிரையிற் குமரக்
கடவு ளேபள்ளி யெழுந்தரு ளாயே.

குழைந்தநல் லடியரின் முகமெனக் கமலம்
கண்டுளி கொண்டன களிப்புடன் மலர்ந்து
தழைமலி தருக்களின் கிளையிடை யருணன்
றன்கதிர் நுழைந்திடப் பைந்துண ருதிரும்
விழைவொடு வேடரின் மகளிர்கள் பலரும்
விருந்துதேன் கனிவகை வெந்தினை கொணர்ந்தார்
மழைமுகிற் பலதவழ் கதிரையிற் குமரக்
கடவு ளேபள்ளி யெழுந்தரு ளாயே.

அரனொலி யெங்கணு மலைகடல் போல
ஆர்த்திடு மன்பர்க ளடைந்தன ரருகில்
முரசுகள் பல்லியம் முழங்கின வெழுந்து
முருகுடை மகளிரின் மெய்யிடை முகிழ்த்த
குரவமுங் கோங்கமுங் காவியங் கண்ணும்
கூத்தியல் புரிவனின் குரைகழல் போற்றி
திரையினர்த் துயின்றிடுங் கதிரையிற் குமரக்
கடவு ளேபள்ளி யெழுந்தரு ளாயே.

புகையிருள் பறந்தது பொங்குகர்ப் பூரப்
புகையொளி மிகுந்தது புங்கவ ரடியார்
வகைபல விரைதரு புகையொடு புகுந்தார்
வலிமிகு தொண்டர்தீப் புகையிடைக் குளித்தார்
தொகையுடை மயிற்குலம் முகிலெனப் புகையை
மதித்தன நடித்தன மகிழ்குயி லார்த்த
பகையசு ரொழித்திடு கதிரையிற் குமரக்
கடவு ளேபள்ளி யெழுந்தரு ளாயே.

கானிடைக் கோழிகள் கூவின கழறிக்
கரைந்தன காகமுங் கறங்கிய சங்கம்
தேனிமிர் வண்டுகள் மொய்த்தன மலரில்
தீங்குழற் பாணிகள் பாடின மயங்கி
மோனிகள் முனிவரர் முப்பதின் மூவர்
மேவின ருன்கழல் மெய்யடி வழுத்த
வானுயர் நெடுங்கிரிக் கதிரையிற் குமரக்
கடவு ளேபள்ளி யெழுந்தரு ளாயே.

அருமறை யோதிடு மந்தண ரொருபால்
அமுதெனுந் தமிழிசை யன்பர்க ளொருபால்
தருமமே சரணெனுஞ் சாக்கிய ரொருபால்
தருக்கிடுஞ் சமயிகள் சார்ந்தன ரொருபால்

திருப்புக ழொடுதொழுந் தேவர்க ளொருபால்
திருமகள் கலைமகள் சயமக ளொருபால்
விருப்பொடு வணங்கிடுங் கதிரையிற் குமரக்
கடவு ளேபள்ளி யெழுந்தரு ளாயே. ௭

உலகினி லுறுபொரு ளுனதரு ளெனவே
உணர்ந்திடு மடியவ ருளத்திடை யெழுந்த
பலகதிர்ப் பகலவ னினதுருக் கரந்து
பற்பல வற்புதம் புரிவதுன் றிறமே
நிலமிசை நின்னடி யோங்களெம் வினைகள்
நைந்திடத் திருக்கடை நோக்கம தருள்வாய்
புலவர்கள் பரவுநற் கதிரையிற் குமரக்
கடவு ளேபள்ளி யெழுந்தரு ளாயே. ௮

உளதென விலதென வுண்மையை யுணரா
துளறிடு மதத்தர்க ளுரையினைக் கடந்த
பழமறைப் பொருளுனைப் பத்தர்க ளுணர்வார்
பாரிட மனைத்தினும் படர்ந்தபே ரொளியே
உளமென வுயிரென வுணர்வென வுன்னை
உலகென வுருவென வருவென வழைத்தோம்
களமெனக் குறித்திடுங் கதிரையிற் குமரக்
கடவு ளேபள்ளி யெழுந்தரு ளாயே. ௯

முன்னைநா ளசுரர்தம் பொய்யினைக் கடிந்துன்
மெய்யினை நிறுத்திய மொய்கழ லரசே
அன்னியர் பொய்ந்நெறி யழித்திடற் கெழுந்துன்
அருளுருக் கொள்ளுதற் கமையுநா ளணித்தால்
தன்னிக ரில்லதோர் தேவுனைத் தொழுதோம்
தண்ணருள் சுரந்தெமைக் காப்பதுன் பரமாம்
பொன்மயக் கிரியுடைக் கதிரையிற் குமரக்
கடவு ளேபள்ளி யெழுந்தரு ளாயே. ௧௦ 105

சு. நடேசபிள்ளை

## கதிரை யாத்திரை விளக்கம்

ஏதுமறி யாச்சிறியனேன் படும்பா
டியாவர்படு வார்சிறிய நாயும்படாதே
போதும்போது மிந்தவாழ்வு உன்றன்
பொற்கமல பாதநிழ லெற்கருளுவாய்
கண்டவர்கள் நகைத்திடவும் பொல்லாக்
கடிய வறுமையென்னை நசித்திடவும்
மண்டியெழும் பலநோயால் நானும்
வாடுகின்றேன் சுவாமியுன்னைத் தேடுகின்றேன்
அன்பிலே ஞானும் உன்றன்
அம்பொன்மலர்ப் பாதமதை நம்பினவன்காண்
தும்பிமுக னுக்கிளையனே யென்னைத்
துக்கக் கடலில்நின்று தூக்கிவிடுவாய்
வருவாய் முருகையனே என்றன்
மாதுயரந் தீர்த்தருள வேண்டுமையனே
தருவாய்நின் பாதநிழல் இந்தச்
சகத்தி லெடுத்தவாழ்வு சகிக்கமாட்டேன்
ஈரைந்து மாதமாகக் கருப்பையில்
எடுத்தநாற் றச்சடமி தென்றெண்ணுமற்
சேருங்கன் மத்திஞலே இந்தச்
செகவாழ்வை மெய்யென்று சிந்தித்தேனே
மாதாவின் முகங்காணுச் சிறு
மதலைபோ லேயலைந்து கவலையுற்றேன்
காதோடு விழிமடவாள் குறவள்ளி
காந்தனே யெனக்குவேறு ஆந்துணையில்லை
பொல்லாக் கருக்குழியினில் இன்னும்
போகாம லென்னையினிக் காவாயென்றேன்
எல்லோரு மென்னையிகழ நானும்
இச்சென்ம மெடுத்ததிஞு லென்பயனென்றேன்
மாற்றுயென்பி றவியென்றேன் என்றன்
வறுமை பிணிதுயரை மாற்றுவாயென்றேன்

ஆற்றேன் துயரமெல்லாம் உனக்
கபயமபய மென்னை யாண்டருளென்றேன்
குன்றம்பி எந்தவேலனே பொல்லாக்
கொடிய வவுணனைமுன் கொன்றசீலனே
என்றுங் கதிரைமலையில் அன்பில்
இருக்கும்தெய்வானைவள்ளிநாயகாவென்றேன் 106

— விநாயகமூர்த்திச்செட்டியார்

## கதிர்காமக்காக்ஷி அழைப்பு

வாருமே நீங்கள் வாருமே
வன்னமயில் வாகனைக் காண வாருமே

கல்லு முள்ளும் பாராமல்
கால் வலியைப் பாராமல்
கந்தா கந்தா என்று
கதிர்காம வேலனைக் காண வாருமே க

மாணிக்க கங்கை மூழ்கி
மல ஆணவங் கழுவி
அணியான கந்தன் பாதம்
அனைவருமாய் கூடிக் காண வாருமே உ

எண்ணற்ற யோகி களின்
எண்ணங்களைக் கொள்ளை யிட்ட
ஏக ஜோதி மயனுன
ஏந்தல் கதிர்காமனைக் காண வாருமே ௩

அன்பான முருகா என்று
ஆடிக்கூத் தாடு மன்பர்
தன்பாத தூளி மூழ்கி
தானற்ற வாழ்வைக் காண வாருமே ௪

கல்நெஞ்சையு முருக்கும்
கர்ம விதையை வறுக்கும்
காந்த சக்தி வாய்ந்தகதிர்
காமக் கடவுளைக் காண வாருமே ரு

ஆறுமுகக் கோலத் துடன்
அன்னைய ரைத்தழுவி வரும்
நாறுமலர் மாலை மார்பன்
நாயகனைக் கூடிக் காண வாருமே சு

கொஞ்சும் மதுர மொழிக்
குமரன் கை வேலுடனே
கோலா கலமாய் நின்ற
கதிர்காமத் தெய்வங் காண வாருமே எ

திரைமறை விருந்து கொண்டு
ஜெகத்தை யெலாம் மயக்கும்
சிங்கார வேல வனைச்
சிறைபிடித்தெல்லோருங்காண வாருமே அ

திருப்புகழ் மணி நாதன்
திவ்ய வடிவங் கண்டு
திருநாமம் பாடித் தித்தோம்
தித்தோ மென்று ஆடிக்காண வாருமே கூ

கைகள் சிரமேற் தூக்கி
கங்கைபோற் கண்ணீர் பெருக்கி
சங்கைகள் தீர்ந்தெல்லோரும்
சத்தியமான நிலையைக் காண வாருமே ௧௦

திருப்புகழ் மணி பாட
திசையு ளனைத்து மாட
திருநாம கோஷ மிட்டு
ஹர ஹரா என்றாடிக் காண வாருமே ௧௧

ஆதி பராசக்தி மடி
அழகாக வீற்றி ருக்கும்
ஆதி பரம் பொருளை
அனைவருமாய் அனுபவிக்க வாருமே கஉ 118

ஓம் சக்தி

---

ஹர ஹரோ ஹரா சுவாமி
ஹர ஹரோ ஹரா
ஹர ஹரோ ஹரா சுவாமி
ஹர ஹரோ ஹரா
கதிர்காம வேலனுக்கு ஹர ஹரோ ஹரா.

| | | |
|---|---|---|
| கந்தப்ப சுவாமிக்கு | ஹர ஹரோ | ஹரா |
| திருப்பரங்கிரி தீரனுக்கு | ,, | ,, |
| திருச்செந்தூர்த் தேவனுக்கு | ,, | ,, |
| திருப்பழனிச் செல்வனுக்கு | ,, | ,, |
| திருவேரக பாலனுக்கு | ,, | ,, |
| குன்றிலாடும் குமரனுக்கு | ,, | ,, |
| குஞ்சரிதன் கணவனுக்கு | ,, | ,, |
| குறவள்ளிக் காந்தனுக்கு | ,, | ,, |
| குணங்கடந்த கோலனுக்கு | ,, | ,, |
| சோலைமலைக் கிழவனுக்கு | ,, | ,, |
| சொகுசுக்கார முருகனுக்கு | ,, | ,, |
| சிவசக்தி வடிவனுக்கு | ,, | ,, |
| சிங்கார வேலனுக்கு | ,, | ,, |
| அலங்கார நாதருக்கு | ,, | ,, |
| அன்பர்களின் நேசருக்கு | ,, | ,, |
| ஓங்காரத் தத்துவற்கு | ,, | ,, |
| ஓம் சக்தி தந்தவற்கு. | ,, | ,, 119 |

— முருகதாஸ்

## சிந்து

("தறை மெழுகு கோலமிடு" குறவஞ்சி)

இறையவனைச் சீரலைவா யுறைகுகனைக்
குறையிரப்போம் பெண்ணே — அவன்
ஈங்குமுகில் படிந்துவளந் தாங்குசெழுங்
கதிரைநின்றான் கண்ணே. க

அறிவினிலே அன்பினிலே அழுக்கில்லா
நெஞ்சினிலே பெண்ணே — அவன்
அருளொளியாய் இன்பமதாய் அறவடிவாய்
நின்றிடுவான் கண்ணே. உ

பொறையுடையார் கள்ளமிலாப் புனிதர்களை
வளர்த்திடுவான் பெண்ணே — அவன்
பொல்லார்க்கும் நல்லசெயும் வல்லாரைப்
புரந்திடுவான் கண்ணே. ௩

நிறையுடையான் வள்ளலெனும் நிலையுடையான்
திருவுடையான் பெண்ணே — அவன்
நீங்காமல் எம்முளத்தே ஓங்கியருள்
தனித்துணைவன் கண்ணே. ௪ (123)

— முதுதமிழ்ப்புலவர், மு. நல்லதம்பி

நல்லூர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் இயற்றிய

## கீர்த்தனங்கள்

இராகம் — சுருட்டி தாளம் — ஆதி

பல்லவி

நிருமலர் பரசிவ சண்முகா — சுத்த
நித்திய — சத்திய — வித்தகனுங்குக. (நிரு)



...வெயடிகள் நூல்...

### அநுபல்லவி

திருவுலாவு மிலங்கையின் மேவிய
சீர்திகழுங் கதிர்காமத் துறைதரு
சிற்பரா—அருள்தற்பரா—அன்பர்
சிந்தை யுகந்தமருந் தனிவேலனே. (நிரு)

### சரணங்கள்

பரமனருளும் புதல்வா—பரமானந்தசிவ
பத்தர்க்கருளு முதல்வா
கருணைசேர் சச்சி தானந்தவடிவே
கணிப்பிலாச் சதுர்மறையின் முடிவே
கந்தனே—உமைமைந்தனே—என்னைக்
காத்து மலவிருள் தீர்த்தினி தாளுவாய். (நிரு)

அறிவுக்கறிவாய் நின்றவா—கிரௌஞ்ச கிரியுடன்
அவுணர் கிளையைக் கொன்றவா
குறிகுண மிறந்திலகு முருகா
கூர்ந்துளாயணி திருமான் மருகா
கோலனே—புரிநூலனே—ஒற்றைக்
கொம்பினன் பின்வரு தம்பியே யின்பருள். (நிரு)

அயனைச் சிறையில் வைத்தவா—அகத்தியமுனிவனுக்
கருளோ டுபதேசித்தவா
வியனுல கமரருக் கருள்தாளா
விண்ணுதல் வள்ளிக்கொடி புணருந்தோளா
மெய்யனே—எமதையனே—அரவிந்த
மலர்நிகரும் பாதந் தந்தருள். (நிருமலர்) 124

இராகம்—அசாவேரி தாளம்—ஆதி

### பல்லவி

சிவகுரு நாதருக்குச் செயமங்களம் - நல்ல
செங்கமல பாதருக்குச் செயமங்களம்.

அநுபல்லவி

பவமறுத் தெனையாளும் பன்னிருதோளருக்கு
தவமுனி வர்களுளந் தங்கருளாளருக்குச் (சிவகுரு)

சரணங்கள்

கன்னிவள்ளி நேசர்பாவ நாசருக்கு மங்களம்
கதிர்காம வேலரீழ தேசருக்கு மங்களம்
மன்னுமடி யார்க்கருளு மாசில்கும ரேசருக்கு
துன்னியவ னந்தகோடி சூரியப்பிர காசருக்குச் (சிவ)

மங்கையுமை பாலர்வடி வேலருக்கு மங்களம்
மன்னுமறை நூலானு கூலருக்கு மங்களம்
துங்கமிகு சிவாகம போதக சுசீலருக்குச்
செங்கையில் விளங்குவளைத் தெய்வயானை லோல
[ருக்குச் (சிவ)

சங்கரன் குமாரர்குலைத் தாரருக்கு மங்களம்
தன்னிகரில் லாதநல் லூரருக்கு மங்களம்
பொங்குசினத் தவுணரைப் போரில்வென்ற வீரருக்குத்
துங்கவகத் தியற்கருள் தோமிலதி தீரருக்குச்
(சிவ) 125

வாழி கதிரையப்பன் வாழிகுற வள்ளியுடன்
வாழிதெய்வ யானையரும் வாழியென்றும் வாழியரே
கோழிக் கொடிவாழி குலவுமஞ்ஞை தான்வாழி
ஆழி யுலகத்தோ ரனைவோரும் வாழியரே. 126

—கதிர்காமக் காதல்

# கதிர்காம ஸ்தல சம்பந்தமான நூல்கள்

1. கதிரை நிரோட்டகயமகவந்தாதி – நா. பரமசாமி ஐயர்—1894.
2. கதிரேசன்பேரில் ஆனந்தக்களிப்பு – இராமசாமியா பிள்ளை—1895.
3. கதிர்காமக் கலம்பகம் – சரசுவதிபீடம் கந்தப்ப சுவாமிகள்—1897.
4. கதிர்காமம் மாணிக்கப்பிள்ளையார் திருவருட்பாமுதலி யன - திருநெல்வேலி திருஞானசம்பந்தப்புலவர் - 1904
5. கதிரையம்பதிச் சுப்பிரமணிய சுவாமிபேரில் அகர வருக்கக் கோவை - வை. பொன்னையா + பொ. வைத்தியலிங்க உபாத்தியாயர்—1905.
6. கதிர்காமவேலவர் தோத்திரப்பாமாலை – செல்லம் உபாத்தியாயர்—1912.
7. கதிர்காமசுவாமிபேரில் பேரின்பச்சிந்து - ப. வயிர முத்து—1912.
8. கதிர்காமபுராணவசனம்–சி. தாமோதரம்பிள்ளை—1913
9. கதிர்காமவந்தாதி – சு. வெற்றிவேலுப்பிள்ளை—1915.
10. கதிரையந்தாதி–சிவ. பஞ்சாட்சரக் குருக்கள்—1915.
11. கதிரைமலைப் பேரின்பக்காதல் – சு. சோமசுந்தர ஐயர்—1920.
    [இப்பெயருடன் பல நூல்கள் வெளிவந்துள்ளன.]
12. கதிர்காம வேலவர் பதிகம் – க. சோமசுந்தரப்புல வர்—1921.
13. கதிர்காமநாதர் தோத்திரப்பாமாலை - ஆ. வேலாயுத பிள்ளை—1922.
14. கதிர்காமக் கண்ணருட் தமிழ்மறை – க. சிதம்பர நாதன்—1924.

15. கதிர்காமயாத்திரை - நா. வை. தியாகராஜா—1924.

16. கதிரையாத்திரை விளக்கம் – விநாயகமூர்த்திச்செட்டியார் — 1925.
[ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் பாடிய கீர்த்தனங்களுடன்.]

17. கதிரைச் சுப்பிரமணிய ரகவல் - கந்தையா அடியான் —1926.

18. கதிர்காமக்கடவுள் பதிகம் – சண்முகானந்த சுவாமிகள் — 1927.

19. கதிர்காம சுவாமிபேரில் தோத்திரப்பாமாலை – ப. வைரமுத்து—1927.

20. கதிர்காம சுவாமிபேரில் கிளித்தூது – ப. வயிரமுத்து —1928.

21. கதிர்காமஸ்வாமிதோத்திரம் - த. காசிநாதசர்மா -1932.

22. கதிர்காமபுராணம் (செய்யுள்) – சி. நாகலிங்கபிள்ளை —1932.

23. கதிர்காமவேலவர்மேல் பக்திக்கவிகள் - க. வேலுப்பிள்ளை — 1933.

24. கதிரைமலைப்பள்ளு – வ. குமாரசுவாமிப்பிள்ளை பதிப்பு—1935.

25. கதிர்காமக்காதல்–க. இராமச்சந்திரன் பதிப்பு—1935

26. கதிர்காமவேலவர் திருவருட்பா – தர்மபுரம், சிவஞான தேசிக சுவாமிகள்

27. கதிர்காமத்தம்மானை – மட்டக்களப்பு, நல்லதம்பிட புலவர்

28. கதிரை நான்மணிமாலை–நெ. வை. செல்லையா —1936.

29. கதிர்காமநாதன் திருப்பள்ளியெழுச்சி - சு. நடேசபிள்ளை

30. கதிர்காமமாலை – நெ. வை. செல்லையா—1940.

31. கதிரைமலைக்குறவஞ்சி - சுதுமலைப்புலவன் விநாயகன் (அச்சிடப்படவில்லை).

32. Katragama - Its Γemple Festival Pilgrimages etc. by M. Covington 1873

33. கதிர்காம க்ஷேத்திர மான்மியம் - சி. தாமோதரம் பிள்ளை —1905.

34 The Worship of Muruka by Sir P. Arunachalam —1924.

35. கதிர்காமவேலவர் - அ. க. இளையதம்பி—1926.

36. கதிரகாமப் பிள்ளைத் தமிழ் — சிவங். கருணாலய பாண்டியப் புலவர்—1937.

37 Katragama by Mudlr C. Rasanayagam—1938.

38. கதிர்காமமுருகன் - வ. ஞானபண்டிதன்—1939.

39. கதிர்காமம் - கோ. நடேசஐயர்—1946.